https://tamileelamarchive.com/


# SOLT

STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

28.பெப்ரவரி.1986 வேட்டு-8 அன்பளிப்பு 50p


## ஹெலிகப்டர் சேதம்! புலிகள் 144 மணி நேரமாக

## தருமபுரத்தில் நேரடிச் சமர்

புதைந்த வாகனங்கள் மீட்கபபடவில்லை. இராணுவத்தினர் திரும்பிவர முடியாமல் தத்தளித்துக் காவைப்பட்டனர்.

ஹெலிகப்டர் இறங்கமுடியாதபடி போராளிகள் தாக்குதல் நடத்தியதால் இராணுவத்தினருக்கான உணவுப் பொட்டலங்கள் மேலேயிருந்து போடப்பட்டன.

கிளிநொச்சி தருமபுரத்தில் 06/02 அன்று முடிவடைந்த 144 மணி நேரமாக இரவு பகல் பாராது, ஆயுதப்படையினர் தரை, வானம் மூலமாக நடத்திய தாக்குதலுக்கு புலிகள் பதில் தாக்குதலைச் சளைக்காது வெற்றிகரமாக நடத்தினர்கள்

ஹெலிகப்டர் ஒன்று போராளிகளின் ரொக்கட லோஞ்சரினால் பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அதியுயரத்தில் நின்று விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளை வீசியதாகவும் தெரிகின்றது.

அதேவேளையில் ஆயுதப்படையினர் தருமபுரம் பகுதியில் இருந்து வெளியேற முடியாத நிலையிலேயே நேற்று மாலையும் காணப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று மாலை அறிவித்தார்கள்.

*வாஞ்சையும் விடுதலை உணர்வு! மீளுக தமிழீழம்!*

## வில்விசை ஒரு புறம்! வேட்டோசை மறுபுறம்!

விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்யாத அரசாங்கமாகவே செயல்படுகின்றனர்!

## சிங்கள ராணுவம் சின்னாபின்னமாக சிதறி ஓட்டம்! பல முனைகளிலும் விடுதலைப் புலிகள் பயங்கரத் தாக்குதல்கள்!

தமிழீழ மக்களின் உரிமைப் போராட்ட எழுச்சியை நசுக்கும் நோக்குடன் தமிழ் மக்கள் மீது தாக்குதலை நடத்திவரும் சிங்கள இராணுவத்தை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியான தாக்குதலை நடத்தி வருகின்றது. தமிழ் மக்களைத் தாக்கி அவர்களின் அன்றாட வாழ்வின் அமைதியைக் குலைப்பதன் மூலமும், அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான உணவு முதலியவற்றை கிடைக்காமல் செய்வதன் மூலமும் பணிய வைத்து விடலாம் என்ற எண்ணத்தில் அவர்கள் மீது இலங்கை இனவாத அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. 3ம் பக்கம் பார்க்க

## தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழத்தில் முன்னெடுத்துச் செல்கின்ற தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தினை உலக நாடுகளின் கவனத்திற்கும் எடுத்துச் செல்கின்றனர்

***************

உலகத்தில், பல நாடுகளில் ஒடுக்கப்படும் மக்களால் நடாத்தப்படும் வீர விடுதலைப்போராட்டங்களைப் போல தமிழீழத்திலும் தமிழ் மக்களால் துப்பாக்கி ஏந்தி தமது விடுதலைக்காகப் போராடமுடியும் என்ற நம்பிக்கையையும் துணிவையும் தமிழ் மக்களுக்குக் கொடுத்து நல்லதொரு வழிகாட்டலையும்காண்பித்தனர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

ஆம் ! அன்று தென் ஆசியாவின் பலபகுதிகளிலும் தனது புலிக்கொடியினை நாட்டியது மல்லாமல் இலங்கையினை முதல் முதலாக ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவந்த சோழப் பேரரசின் வம்சத்தில் பிறந்த எமது வீரத் தமிழினம் தூங்கிக்கொண்டிருந்தது இல்லை தூங்கவைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அந்தத் தன்மானமுள்ள தமிழினத்தை தட்டியெழுப்பி போராட்டக் களத்தில் குதிக்க வைத்தனர், இன்று தமிழீழத்தில் தமது தியாகத்திலும், இரத்தத்திலும் வீரகாவியம் எழுதி வருகின்ற விடுதலைப் புலிகள்.

7ம் பக்கம் பார்க்க

"இனி ஒரு விதி செய்வோம்" விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம்

# வேங்கை முழல்

அன்பு நண்பா!

விடுதலைப்புலிகளின் வீராவேசமான தாக்குதலுக்கு சிங்கள இராணுவத்தினால் ஈடு கொடுக்க முடியாதமையினை இன்று சிங்கள அரசல்ல, இந்த உலகமே அறிந்துகொண்டுள்ளது. போர் நிறுத்தம் என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து நவீன ரக ஆயுதங்களை இறக்குமதி செய்த போதிலும் கூட தமிழீழ பகுதி எங்கும் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாது, இராணுவத்தீர்வு சாத்தியமற்றது என்றும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம் என்றும், மீண்டும் இந்தியாவின் நல்லுறவை விரும்பி ஓடியுள்ளார் சிறிலங்காவின் பயங்கரவாத அமைச்சர்.

நண்பா! யுத்த நிறுத்த காலத்திலே சிறிலங்கா அரசானது நவீன ரக ஆயுதங்களை இறக்குமதி செய்த போது, பல பத்திரிகை நிருபர்கள் நம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் இது பற்றி கேட்டனர். அப்பொழுது நம் தலைவர் நவீன ஆயுதம் முக்கியமல்ல அதனை ஏந்தும் கைகளில்தான் பலமிருக்க வேண்டுமென மிகவும் மன உறுதியுடன் கூறி ஒவ்வொரு வேங்கையின் மன உறுதியை மறைமுகமாக உணர்த்தினார்.

ஆம் நண்பா! நம் விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத்தினர் போன்று கட்டாயத்தின் பேரிலோ அன்றில் நிபந்தனையின் பேரிலோ இயக்கத்தில் சேர்ந்தவர்கள் அல்ல உணர்ச்சிகளின் விளிம்பில் இலட்சியப் பற்றுடன் தம்மை அர்ப்பணித்த தியாக வேங்கைகள். புலிகளோ கட்டுப்பாடுடனும், கண்ணியமான முறையிலும் பயிற்றப்பட்டவர்கள். அவ்வாறு ஒரு இயக்கமாக வளர்க்கப்பட்டதனால்தான் இன்று தமிழீழ மண்ணிலே மக்களால் ஏற்கப்பட்டு, மக்களின் ஆதரவுடன் மக்கள் இயக்கமாக வளர்கின்றோர்கள். இவ்வாறான புலிகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு பெண் ஆசையும், பொன் ஆசையும் கொண்ட சிங்கள இராணுவமும், காடையர்களும் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்வாங்கிவிட்டு பின்னர் அப்பாவிமக்களைக் கொன்றுகுவித்துவிட்டு புலிகளைக் கொன்று குவித்துவிட்டோம் என்று வீராப்புபேசும் இவர்களது நாடகம் எத்தனை நாட்களுக்குத்தான்.

நண்பா! போர் நிறுத்த காலத்திலே விடுதலைப்புலிகள் மக்களுடன் மக்களாய் இணைந்து தமிழீழத்தில் வாழும் மக்களின் பொருளாதார குறைகளை போக்க முயன்று இன்று தமிழ் மக்கள் எல்லோராலும் ஏற்கப்பட்டு மக்கள் இயக்கமாக வளர்ந்து வருவதை நீயும் அறிந்திருப்பாய். அந்த கால கட்டத்திலே போராளிகள் போல் வேடம் போட்டு மக்களிடமே கொள்ளையடித்து மக்களை துன்புறுத்திய போலிகளையும், மக்களின் ஆதரவுடன் பிடித்து அவர்களை கண்டித்ததையும், தண்டித்ததையும் நீ அறியாமல் இல்லை. ஆனால் மக்கள் மத்தியில் விளக்கக்குறைவுகளையும் ஏற்படுத்தி குழப்பங்களையும் ஏற்படுத்தி புலிகள் மீது மக்கள் சந்தேகம் கொள்ளும் வகையிலும் இவர்கள் நடக்க முயல்கிறார்கள்.

நண்பா! அன்று தொடக்கம் இன விடுதலையே நோக்கமாகவும் இலட்சியமாகவும் கொண்டு அதற்காக தொடர்ந்தும் அயராது போராடி வருவது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பது இன்று உலக ரீதியான உண்மையாகும். புலிகளினுடைய கட்டுப்பாட்டையும், உண்மையான விடுதலை உணர்வையும் கண்டே இன்று தமிழீழத்தில் மக்களால்ஏற்கப்பட்டு ஓர் உண்மையான உன்னதமான இயக்கமாக மிளிர்கின்றது. ஆனால் இன்று ஒற்றுமையை ஒரு சாட்டாக வைத்து தாமும் மக்களுக்காக, விடுதலைக்காக போராடுவதாக கூறி சிலர் சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளை செய்து வருவதுமின்றி, விடுதலைப்புலிகள் தமது உயிர்களையே தியாகம் செய்து நடாத்தும் வரலாற்று புகழ் மிக்க தாக்குதல்களை தாமும் இணைந்து செய்ததாகக் கூறி தொடர்ந்தும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் புகழ் தேடவும், பணம் சேகரிக்கவும் முயல்கின்றனர்.

நண்பா! சந்தர்ப்பவாதிகளையும், போலி இயக்கங்களையும் நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். 1983 ம் ஆண்டு ஆடி மாதம் விடுதலைப்புலிகளின் வீராவேசத் தாக்குதல்களில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும் இதனை சாட்டாக வைத்து ஏற்கனவே திட்டமிட்டபடி ஓர் பயங்கரமான இனக்கலவரம் சிங்கள அரசினால் ஏவி விடப்பட்டதையும் நீ என்றும் மறந்திருக்கமாட்டாய். அந்த இன்னல்களின் போது மக்களுக்கு பெரும் உதவியாக விடுதலைப்புலிகள் தமிழ் மண்ணிலே கடமை செய்து கொண்டிருக்க அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் தம்மை அறிமுகப்படுத்தி வளர்ந்து கொண்டவைதான் இந்த போலி இயக்கங்கள் என்பதை காலம் தாழ்த்தியாவது உணர்ந்திருப்பாய்.

நண்பா! அதே வடிவில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் லண்டன் மாநகரில் ஓர் செய்தியை செவி மடுக்க நேர்ந்தது. அண்மையிலே கிளிநொச்சி மாவட்டத்திலே இராணுவத்தினரை வழி மறித்து ஆறு நாட்களாக புலிகள் நடத்திய தாக்குதல்கள் உலகத் தமிழர் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. ஆனால் இவ்விடம் வாழும் ஓர் இயக்கத்தின் கிளையானது ENLF இல் அங்கம் வகிக்கும் 4 இயக்கங்களுமே இத்தாக்குதல்களை மேற்கொண்டதாக கூறி புகழ் மாலை சூட எத்தனித்தனர். ஆனால் தனித்து விடுதலைப்புலி இயக்கமே அந்த தாக்குதலை மேற்கொண்டது என்பதனை நாம் திட்டவட்டமாக இவ்விடம் தெளிவு படுத்தினோம்.

நண்பா! இந்த நேரத்தில் ENLF இல் விடுதலைப்புலிகள் ஓர் அங்கமா? என்ற வினாவில் உன் போன்றோர் குழம்பியிருப்பதை நாமறிவோம். இவ் ENLF என்னவாக இருந்தாலும் அது பற்றி நாம் கவனம் கொள்ளவோ அன்றி கவலை கொள்ளவோ இல்லை ஆனால் ENLF இல் தமிழீழ விடுதலைப்புலி இயக்கம் ஓர் அங்கம் அல்ல என்பது உறுதி. சில மாதங்களுக்கு முன்பு உன் போன்ற நண்பர்களின் அழுத்தம் காரணமாக ஒற்றுமை என்ற அடிப்படையில் சில இயக்கங்களுடன், சில அடிப்படை கொள்கையில் இணைய வேண்டியதாயிற்று. அந்த கால கட்டத்திலே நம் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையை நாம் பத்திரிகையில் பிரசுரித்ததுடன், ஒலிப்பதிவு நாடாக்கள் மூலமும் விநியோகம் செய்தோம்.

நண்பா! யாரையாவது சாடவேண்டும் என்பதல்ல எமது நோக்கம். மக்கள் உண்மையான விடுதலை இயக்கங்களை இனம் கண்டு கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம். ENLF இல் 3 இயக்கங்கள் இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளும் ENLF உம் ஒற்றுமைக்கான 5 அடிப்படை தீர்மானங்களில் ஒற்றுமைப்பட்டு தலைவர்களினால் கையொப்பமிடப்பட்டன. இந்த ஒற்றுமை அறிக்கை லண்டன் மாநகரில் விநியோகம் செய்தபோது சில தவறான கருத்துக்களும் மக்கள் மத்தியில் புகுத்தப்பட்டன. அதன் உண்மை நிலையினை மக்கள் உணர வேண்டுமென்பதற்காக எமது பத்திரிகையின் வெட்டு 3 இல் நாம் ஓர் அறிக்கையினை பிரசுரித்திருந்தோம். அவ் அறிக்கையின் சாராம்சமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கப்பிரசாரம், நிதி சேகரிப்பு ஆகியவற்றில் தொடர்ந்தும் தனித்தே இயங்கி வருவதுடன், எந்த ஒரு அமைப்புடனும் இணைந்து பொது வங்கிகணக்கு புலிகளுக்கு இல்லை எனவும் ENLF இல் தமிழீழ விடுதலைப்புலிகள் ஓர் அங்கம் இல்லை என்பதனையும், தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்படும் சகல இராணுவ நடவடிக்கைகளும் தனித்து தமிழீழ விடுதலைப்புலிகளினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் மிகவும் தெளிவாக பிரசுரித்திருந்தோம்.

நண்பா! இன்று நம் சொந்த மண்ணிலே இந்த போலிக் கும்பல்கள் மக்களை ஏமாற்ற முடியாமல் வெளிநாடுகளில் தம் முயற்சியை முடுக்கியுள்ளனர். தமிழ் மண்ணில் கொள்ளை நாடகம் நடத்தி மக்களினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டவர்கள் சொந்த மண்ணில் எவ்வித எதிர்ப்பையும் காட்டாமல் மௌனமாக இருந்துவிட்டு, மூன்று மாதங்களின் பின்பு தாம் அவ்வாறு செய்யவில்லை எனவும் எம்மியக்கத்தை குற்றம் கூறியும் பிரசுரங்கள் வெளிநாடுகளில் வெளியிட்டுள்ளாராம். தாயகத்தில் மக்கள் மத்தியில் விளக்கமுடியாத இவர்கள் வெளிநாடுகளில் கபட நாடகம் ஆடுகின்றனர்.

11ம் பக்கம் பார்க்க

தமிழீழ ஆவணக்காப்பகம்

வில்லிசை ஒருபுறம்.....
தமிழீழத்தில் அன்றாடம் தமிழ் மக்களை சிறுவர்கள், முதியோர், பெண்கள் என்ற வேறுபாடின்றி சிங்கள இராணுவம் கொன்று குவித்து வருகிறது. தமிழ்ப்பகுதிகளில் பெரும் உணவுத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் தமிழீழத்தில் உணவு உற்பத்திக்கு இடையூறு செய்து வருவதுடன் உற்பத்தியான உணவுப் பொருட்களைச் சூறையாடுவதிலும், அழிப்பதிலும் சிங்கள இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த அடக்குமுறை வெறியாட்டத்தின் பின்னணியை நன்குணர்ந்த தமிழ் மக்கள் எவ்வளவு துன்பத்தை ஏற்றுக் கொண்டாவது தம் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வாக சுதந்திரத் தமிழீழத்தை அடைவோம் என்ற உறுதியுடன் இருக்கின்றார்கள். சிங்கள இராணுவத்தின் ராக்கெட் தாக்குதல், விமானக் குண்டுவீச்சு, கெலிக்கொப்டர் தாக்குதல்களுக்கு மத்தியில் தமிழ் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் தற்போது வரலாறு காணாத மறியல் போராட்டங்களில் இறங்கியிருக்கின்றனர்.

அன்றாடம் தமிழர்கள் கொல்லப்படுவதையும், தமிழ்ப்பெண்கள் கற்பழிக்கப்படுவதையும், சிறுவர்கள் சித்திரவதைக்குள்ளாவதையும் தடுத்து நிறுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத்தை எதிர்த்து பல்வேறு சிரமங்களுக்கும் இழப்புக்களுக்கும் மத்தியில் எதிர்த்தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தி வருகின்றார்கள். கடந்த மாதத்தில் மட்டும் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினரும் கொமாண்டோ பொலிசாரும் கொல்லப்பட்டதுடன், அவர்களது வாகனங்களும் சிதைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். இந்த விடுதலைப்போரில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களில் சிலர் வீர மரணமடைந்துள்ளனர். எனினும் எவ்வித இழப்புக்களையும், துன்பங்களையும் தாங்கி விடுதலைப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதில் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதியுடன் செயற்பட்டு வருகிறார்கள்.

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு பரிசுத்த பாப்பரசர் அறிவுரை

"நாம் ஒவ்வொரு மக்கள் கூட்டத்தின் இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் மதித்து ஆதரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் தனித்துவத்தையும் கலாசாரங்களையும் அவற்றின் உண்மையான பெறுமதியையும் உணர்ந்து கொண்டு மதிக்க வேண்டும்.

இவ்வாறு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரும் வத்திகான் என்ற சிறிய நாட்டின் தலைவருமான 1986 ஆம் ஆண்டுக்கான தமது புத்தாண்டுச் செய்தியில், தமிழீழ மக்களின் இறைமையையும் தேசிய சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க மறுத்து தமிழ் இனக்கொலையில் ஈடுபட்டிருக்கும் ஜெயவர்த்தனவுக்கு அறிவுரை கூறும் பாணியில் குறிப்பிட்டிருக்கிறார்.




தேச பக்தர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களது சிந்தனைகள், செயல்பாடுகள், சிந்தனைகளைத் தாங்கிய கடிதங்கள், எழுத்துக்கள் எல்லாமே வரலாற்றில் இடம்பெறத் தக்கவை மட்டுமல்ல—வரலாற்றைச் சரியாகக் கணிக்கும் வல்லமை பெற்றவையும்கூட.

ஓரளவுக்கு இக்கால இளைஞர்கள் மத்தியில் தேசப்பற்றும், சமூகப்பிரக்ஞையும், வரலாற்றுக் கண்ணோட்டமும் வளர்ந்து வருவதை 'வ.உ.சி. கடிதங்கள்' என்ற இம்மாதிரி நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்நூலில் வ.உ.சி. அவர்கள் அவ்வப்போது எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வ.உ.சி. சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து கப்பலோட்டிய காலத்தில் எழுதப்பட்ட கடிதங்களும், தீவாந்திரத் தண்டனை பெற்றுக் கோவைச் சிறையில் செக்கிழுத்து, கல்லுடைத்த காலகட்டத்திலும் அவர் எழுதிய கடிதங்கள் அவரது உணர்வைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

**விசாரணைக் கைதியாக பாளையங்கோட்டை சிறையில் இருந்தபோது கப்பல் கம்பெனிக்கு எழுதியது.**

(பகிரங்கக் கடிதம்)

1908

சகோதரர்களே! நான் இப்போது சிறையில் உள்ளேன்; நாளை என் கதி என்ன ஆகுமோ? தெரியாது. ஆகையினால் சகோதரர்களாகிய நீங்கள் எல்லோரும் என்மேல் காட்டும் அனுதாபத்தையும், அன்பையும் நமது கப்பல் கம்பெனி மீது காட்டுங்கள். இந்தக் கம்பெனியானது பங்காளிகளின் தன லாபத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரக் கம்பெனி என்றெண்ணாமல் நமக்கு ஆருயிரினும் இனிய பாரதமாதாவாகிய பரிசுத்த தெய்வத்தின் தேவஸ்தானமாகவும், ஆலயமாகவும், தருமமாகவும் கருதி, மாதுர் பக்தியுடனும், தேசாபிமானத் துடனும் உழைக்க வேண்டும். இந்தச் சுதேசிக் கம்பெனி அந்நிய விரோதிகளின் சூழ்ச்சிக்குத் தான் வெற்றி பெறுமானால் அது கேவலம் அதிலுள்ள பங்காளிகளின் வெற்றியன்று. பாரததேவியின் ஸ்வராஜ்ய வெற்றியேயாகும். இந்தக் கம்பெனி அந்நியருடைய போட்டிகளையும் மீறி லாபம் அடையுமானால் அது கேவலம் நாணய ரூபமான லாபமன்று. ஆனால், நாம் இதுவரை பிறரிடம் விற்பனை செய்து கொண்டு வந்த ஸ்வதந்திர சுயேச்சை முதலிய அதிக தனங்களைக் கைப்பற்றியடைந்தாற் போன்ற ஜாதிய ஸ்வதந்திர லாபமாகும்.

பாளையங்கோட்டை — வ.உ. சிதம்பரம்
9.6.1908

**காந்தியடிகளுக்கு**

வ.உ. சிதம்பரம் பிள்ளை
மயிலாப்பூர்,
சென்னை.
22 மே. 1915.

மோ.க. காந்தி அவர்கள்,
பார்-அட்-லா,
அகமதாபாத்.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 20-ம் தேதி எழுதிய அன்பார்ந்த கடிதத்துக்கு நன்றி பல. தாங்கள் சென்ற மாதம் 21-ம் நாள் எழுதிய கடிதத்திலிருந்து எனக்குத் தருவதற்காகத் தங்களிடம் தரப்பட்ட பணம் தென் ஆப்பிரிக்க ஒத்துழையாமைப் போருக்காகச் செலவிடப்பட்டது என்றும்,

4ம் பக்கம் பார்க்க.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



**வ.உ.சி கடிதங்கள்.....**

அந்தப் பணத்தைத் தாங்கள் தங்கள் கையிலிருந்து தர விரும்புவதாகவும், அதுவும் முழுமையாக இராது என்றும் நினைத்தேன். அதனால் அது குறித்து இனிமேல் தாங்கள் தொந்தரவு பட வேண்டியது இல்லை என்று எழுதினேன்.

ஆனால், இம்மாதம் 20-ம் தேதி தாங்கள் எழுதிய கடிதத்திலிருந்து அந்தப் பணம் வேறு எதற்கும் செலவிடப் படவில்லையென்றும், அது இன்னும் எனக்குத் தரப்படுவதற்காகத் தங்களிடமே இருக்கிறது என்றும் தெளிவாகிறது. என்னுடைய தற்போதைய நிலையில் தங்கட்கும் தங்கள் நல்ல நண்பர்களுக்கும் இன்னும் நன்கொடை தந்த எல்லோருக் கும் நன்றி பாராட்டி அத்தொகையைப் பெற்றுக் கொள்ளவே அவாவுகிறேன்.

கடந்த இரண்டாண்டுக் காலமாகச் சில தென் ஆப்பிரிக்க நண்பர்கள் தயவே என்னையும் என் குடும்பத்தையும் காத்து வருகிறது என்பதை நான் ஏற்கெனவே தங்களிடம் நேரில் தெரிவித்துள்ளேன். இப்போதுகூட அவர்களிடம் சிறு உதவி வேண்டி விண்ணப்பம் செய்துள்ளேன்.

இந்த நிலையில், எனக்காகத் தரப்பட்ட பணத்தை, எனக்காகத் தரப்படத் தயாராய் இருக்கும் பணத்தை எனக்கு வேண்டாம் என்று சொல்ல எக்காரணமும் இல்லை. இப்போது இருக்கும் நிலையில் அந்தப் பணம் வேண்டாம் என்று நான் சொல்வேனானல், அது நான் எனக்கும் என் குடும்பத்துக்கும் இழைக்கும் தவறாகும். அதனால், தாங்கள் தங்கட்கு வசதிப்பட்டபோது அன்போடு அப்பணத்தைப் பின்வரும் என் முகவரிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறேன்...

தங்கள் உண்மையுள்ள,
வ.உ. சிதம்பரம்.

ஈ.வெ.ரா. பெரியாருக்கு

செங்கை
10.7.28

அன்பார்ந்த சகோதரர் அவர்களே,

நமஸ்காரம், க்ஷேமம், க்ஷேமத்துக்குக் கோருகிறேன்.

தங்களுக்கு வயதாக வயதாகக் கோபமும், மறதியும், சண்டைக்குப் போதலும் அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது போலவே தோன்றுகிறது.

வரதராஜுலு நாயுடு அவர்களைப் பற்றி ஒன்றும் குடியரசிலும் திராவிடனிலும் எழுதக்கூடாதென்றும், தங்களையும் நாயுடு அவர்களையும் நாங்கள் பலர் மேன்மேலும் கேட்டுக் கொண் டிருந்தும் இடையிடையே எழுதி விடுகின்றீர்களே. ஆனி மீ 25ம் வெளிவந்த 'குடியரசு' 10-ம் பக்கம் மூன்றாவது பத்தியில் அண்மையில், குப்புசாமி முதலியவர்களோடு 'வரதராஜுலு' என்று எழுதியிருக்கிறீர்களே? இது நியாயமா? இனிமேலாவது அவ்வாறு நாயுடுவைப் பற்றியாவது, 'தமிழ் நாட்டைப்' பற்றியாவது மதிப்புக் குறைவாக எழுதாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். பத்திராதிபர் முறையில் ஒருவர் விஷயங்களை ஒருவர் காரணங்களோடு ஆக்ஷேபிக்கலாம். ஆளைத் தாக்குதலே வேண்டாம்...

'தமிழ் நாடு' ஆபீசிலிருந்து இதுது எழுதப்பட்டாலும் இதனை வேறு ஒருவரும் பார்க்கவில்லை.

12.7.28 'போட் மெயிலில்' இங்கிருந்து புறப்படுகிறேன். தம்பி தண்டபாணி பிள்ளை வீட்டில்தான் தங்கியிருக்கிறேன்.

அன்புள்ள,
வ.உ. சிதம்பரம்.

கடித விவரம்:

ஆனி மாதம் 25-ம் தேதி 'தொழிலாளர் துயரமும் சைமன் பஹிஷ்கார வேஷமும்' என்ற தலைப்பில் பெரியார் 'குடியரசி'ல் தலையங்கம் எழுதினார். அதில் தொழிலாளர் விரோதிகளைக் குறிப்பிடும் போது வரதராஜுலுவையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார். வ.உ.சி. குறிப்பிடுவது இத்தலையங்கத்தையே.

இக்கடிதம் 'பெரியார் நூற்றாண்டு மலரில்' இடம் பெற்றுள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் 'தமிழ்நாடு', டி.எஸ். சொக்கலிங்கம் நடத்திய தினசரி இதழ்.

நா. சுப்பிரமணிய பிள்ளைக்கு

1935

வ.உ. சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடி,
வக்கீல் 1.6.1935

அன்புள்ள மைத்துனர்,

க்ஷேமம், க்ஷேமத்துக்கு எழுது. உன் கடிதங்களெல்லாம் வந்தன. என் கையில் ரூபா இல்லை. கனம் முதலாளியவர் களிடம் ரூபா கேட்க வெட்கமாயிருக் கிறது. நானும் வெங்கும் ஜூன் மீ 11ம் மாலையில் அல்லது ஜூன் மீ 12-ம் காலையில் குலசேகரப் பட்டணம் போவதற்கு அங்கு வருவோம். அப்போது ரூபா கொண்டு வருகிறேன்.

அன்புள்ள,
வ.உ. சிதம்பரம் பிள்ளை.

TIGERS
thirst is for
TAMIL EELAM







**தமிழீழப் பயணங்கள்முடிவதில்லை தொடர்கிறது.**

அண்மைக் காலத்தில் தமிழீழம் கண்டிராதவகையில் ஈழத்தமிழரின் எழுச்சியையும், விடுதலை உணர்ச்சியையும் எடுத்துக்காட்டும் வகை யிலான, சுமார் பதினையாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட வரலாற்றுப் பெருமை பெறும் ஊர்வலம் நேற்று யாழ் நகரில் நடைபெற் றது. தமிழீழத்திலிருந்து ஆயுதப் படையினரை வெளியேறுமாறும் ஆயிரம் மீட்டர் பாதுகாப்பு வலயச் சட்டத்தை நீக்குமாறும் கோரி இவ் ஆர்ப் பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. தமிழ் மக்களின் மனக் கொதிப்பை யும், பாதுகாப்பற்ற வாழ்க்கையையும் எடுத்துக் காட்டும் வகையில் இவ் ஊர்வலம் நடைபெற்றது. 29/1/86 காலை 9-30 மணிக்கு யாழ். பெருமாள் கோவிலடியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி யூடாக ஆரியகுளம் சந்தியையடைந்த இந்த பிரமாண்டமான ஊர்வலம் அங்கிருந்து பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி என்பவற்றுக்கூடாகச் சென்று யாழ். செயலகத்தை நண்பகல் பன்னி ரண்டு மணியளவில் அடைந்தது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



## தமிழகத்தில் அராஜகச் செயல்கள் புரியும் கும்பல்களுக்கு

## எதிராக தமிழக மக்கள்

****************

தமிழீழ விடுதலைப் பாதையை சரியான முறையில் வகுத்து அதனை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள், எமது தேசிய இன விடுதலைப் போராட்டப் பாதையில் தமிழக மக்களின் பங்கு மிக மிக முக்கியமானது என்றும் அதுவே எமது போராட்டத்தின் முக்கிய பகுதியாக அமையவிருக்கின்றது என்றும் நன்கு உணர்ந்தே எமது சகோதரர்களாகிய தமிழக மக்கள் மத்தியில் தங்கியிருக்கின்றனர்

இந்திய அரசு தனது செல்வாக்கை அல்லது தனது அதிகாரத்தினை எம்மீது திணிக்க முடியாதவாறு எம்மைப் பாதுகாக்க வேண்டியவர்கள் தமிழக மக்களே. அதாவது தமிழீழ மக்களின் உறுதியான இறுதியான முடிவு சுதந்திரத் தமிழீழம் தான் என்பதனை தமிழக மக்களும் ஏற்றுக்கொள்வார்களேயானால் இந்திய அரசு தலைகீழாக நின்றாலும் எவ்வித குறைந்தபட்சத் தீர்மானங்களையும் எம்மீது திணிக்கமுடியாது.

இதனடிப்படையில் தமிழக மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் எடுத்துவரும் செயற்பாடுகளோ பற்பல. ஆனால் இம்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக சில அமைப்புக்கள் தமிழகத்தில் தமது அடாவடித்தனங்களையும், கட்டுப்பாடற்ற சிறுமைத்தனங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. தமிழக மக்களின் ஆதரவுடன், அவர்களிடம் எமது போராட்டத்திற்கான உதவியைப் பெறமுடியாதவர்கள் தமிழக வங்கிகளிலும் கடைகளிலும் கொள்ளை அடித்தல், கள்ளக் கடத்தல் செய்தல் போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபடுதலும், தமிழக மக்களது பார்வைக்கு எட்டிய வகையில் துப்பாக்கிகளைக் காவித்திரிதல், வாகனங்களை (ஜீப்) அதிவேகமாக கூச்சல் போட்டவண்ணம் செலுத்திச் செல்லல் போன்ற கட்டுப்பாடற்ற செயல்களால் தமிழக மக்களின் நன்மதிப்பை இழக்கக் காரணமாயுள்ளனர் சில கும்பல்கள். எல்லாவற்றிலும் மேலாகவுள்ளது சில அமைப்புக்கள் காவற் படையினருக்கு எதிராகவும், தமிழக மக்களுக்கெதிராகவும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கெதிராகவும் தமது துப்பாக்கிகளை நீட்டிய சம்பவங்கள். இப்படியான பொறுப்பற்ற செயல்கள் நிட்சயமாக எமது விடுதலைப் போராட்டத்தினைப் பாதிக்கப்போவது என்பது உண்மை. எனவே இதுசம்பந்தமாக அந்தந்த அமைப்புக்கள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க முன்வர வேண்டும் என்பதே எமது அவா.

அண்மையில் வேதாரணியத்தில் நிகழ்ந்த பொறுப்பற்ற, கட்டுப்பாடற்ற சில சம்பவங்களால் வேதாரணிய மக்கள் மட்டுமன்றி தமிழக மக்களுமே குழம்பிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பொதுவாக எந்த விடுதலை அமைப்புக்களாயினும், தமிழகத்தில் செய்யும் தவறுகள் புலிகளின் தலையிலேயேவிழுந்துள்ளன. எனவே இப்படியான செயல்களால் பாதிப்புறும் எமது ஆதரவை மீட்டெடுக்க நாம் தமிழக மக்களுக்கும் உலகத்தமிழ் மக்களுக்கும் உண்மைநிலையை எடுத்துவிளக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

இங்கு தரப்படுவது 15/01/86 அன்று தமிழகப் பத்திரிகைக் குழு ஒன்றினால் வேதாரணியச் சம்பவம் தொடர்பாக அவ்விடத்து மக்கள் சிலரைப் பேட்டி கண்டு வெளியிட்ட அறிக்கைகள்.

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுல மாணவிகள் ஊர்வலமாக கோயிலுக்குச் சென்றபோது, இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சிலர் சென்ற ஜீப், இவர்கள் மீது மோதிவிடவே இதுவே ஒரு பெரிய பிரச்னைக்கு காரணமாகி விட்டது. இந்த ஜீப்பில் வந்தவர்கள் தம்பாபிள்ளை தலைமையில் செயல்படும் தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. தற்செயலாக மோதியிருந்தால் கூட இவர்களாகவே முன்வந்து மன்னிப்புக் கேட்டிருக்கலாம். பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அதில் கலந்து கொள்ளாததும் பொது மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து ஊர்வலம்.. கலாட்டா... பொதுமக்கள்—தமிழீழ ராணுவத்தினரின் மோதல்... நடந்ததை அந்த ஊர் மக்களே சொல்கிறார்கள்...

வேதாரண்யத்தைச் சேர்ந்த ஜி. கார்த்திகேயன் என்பவர் கூறுகிறார்:

''23.12.85-ம் தேதி வைகுண்ட ஏகாதசிக்கு கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் மாணவிகள் பெருமாள் கோயிலுக்கு ஊர்வலமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் எதிர்பாராத விதமாக தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த சிலர் ஜீப்பில் வந்து, அந்த மாணவிகள் மீது உரசி விட்டார்கள். அதில் 16 பெண்கள் காயமடைந்தனர். தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த அவர்கள் அந்தத் தெருவில் போக வேண்டிய தேவையே இல்லை. இவர்கள் தொடர்ந்து ரொம்ப நாளாகப் பெண்களைக் கண்டால் கேலி செய்வது, போறதும் வர்றதுமாக இருந்தார்கள். ஜீப்பில் போனாலும் ஒழுங்காகவும் போவதில்லை. பத்து பேர், பதினைந்து பேர் என்று ஜீப்பில் ஏறிக் கொண்டு ஆ... ஊ... என்று சத்தம் போட்டுச் செல்வார்கள். துப்பாக்கியை எடுத்துக் கொண்டு போவதும், ஜனங்களிடம் ஒரு பீதியை உண்டு பண்ணுவதுமாக இருந்தார்கள்.

''ஜீப்பை மாணவிகள் மீது உரசிய வேகத்தில் மாணவிகள் அங்கேயும் இங்கேயும் சிதறி ஓடினர். ஒரு மாணவியின் முடி ஜீப் கண்ணாடியில் மாட்டி சிக்கிக் கொண்டது. பல மாணவிகளுக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டு விட்டது. 16 பேர் அடிபட்டதில் 14 பேருக்கு வேதாரண்யம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்தார்கள். இரண்டு பேருக்குப் பலத்த அடிபட்டதால் நாகப்பட்டினம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தனர். அடி பலமானதாக இருந்ததால் நாளடைவில் 12 மாணவிகள் நாகப்பட்டினம் ஆஸ்பத்திரிக்கே அனுப்பப்பட்டனர்.

''இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த கண்ணன் என்பவரையும், அவருடன் ஜீப்பில் வந்த சிலரையும் போலீஸார் கைது செய்து கோர்ட்டுக்கு அனுப்பினார்கள். பிறகு அவர்கள் ஜாமீனில் வெளிவந்து விட்டனர். பிரேக் இன்ஸ்பெக்டர் 'சார்ட்டிஷ்ஸை' செய்த பிறகு, போலீஸார் உள்ளூரில் உள்ள இரண்டு பேரிடம் ஜாமீன் வாங்கிக் கொண்டு ஜீப்பையும் கொடுத்து விட்டார்கள்.

''இது பொதுமக்களுக்குத் தெரிய வந்ததும், போலீஸார் தவறு செய்தவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டார்களே என்று நினைத்தார்கள்.

''இதற்குப் பிறகுதான் பொதுமக்கள் நோட்டீஸ் அடித்து தெரியப்படுத்தி 30.12.85 அன்று ஊர்வலத்தை நடத்தினர். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் பெயரைக் கொடுத்துவிட்டு பள்ளியிலிருந்து வெளியே வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களாகவே எந்தவிதத் தூண்டுதலும் இல்லாமல் கலந்து கொண்டனர். தாலூகா காங்கிரஸ் தலைவரை தலைமையேற்று நடத்தும்படி பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர். மாநில இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் பி.வி. ராஜேந்திரன், அ.தி.மு.க. ஒன்றியத் துணைத் தலைவர் யூனுஸ், கன்யா குருகுல பெற்றோர்கள் அசோசியேஷன் தலைவர் ஹரிகிருஷ்ணன் இன்னும் வியாபாரப் பிரமுகர்களும் தலைமை ஏற்று ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலம் வடக்கு வீதியில் புறப்பட்டு கீழவீதி, தெற்கு வீதி வழியாக அமைதியாகத்தான் வந்தது. மேலவீதி வழியாக ஊர்வலம் முக்கால் வாசி கடந்து விட்டது. அப்படி வரும் போது பரகத் லாட்ஜிலிருந்து கல் வந்து விழுந்தது. அந்த லாட்ஜில் இயக்கத்திலும் சம்பந்தமில்லாத, அகதிகளிலும் சம்பந்தமில்லாத இலங்கை நபர்கள் தங்கிக் கொண்டு கூச்சல் போடுவதும், கள்ளக் கடத்தலில் ஈடுபடுவதுமாக இருந்தார்கள்.

''இவர்களை கஸ்டம்ஸில் வந்து அவ்வப்போது பிடிப்பது போன்ற நடவடிக்கைகளால் அந்தப் பகுதிகளிலுள்ள மக்களிடையே ஏற்கெனவே பெரும் பீதி நிலவி வந்தது. அப்படியிருக்கும் போது அங்கிருந்து கல் வந்து விழுந்ததும் கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டது. பொதுமக்களும் லாட்ஜை நோக்கி சரமாரியாகக் கற்களை வீசத் தொடங்கினார்கள். லாட்ஜிலிருந்து ஊர்வலத்தை நோக்கி கல்லெறிந்த செய்தி ஊர்வலத்தினர் எல்லோருக்கும் தெரிய வந்ததும் பெரிய கலவரம் ஏற்படத் தொடங்கியது. போலீஸார் ஊர்வலத்தினரை அமைதிப்படுத்தி ஒரு கட்டுக்குள் கொண்டு வந்தனர். பிறகு லாட்ஜிலிருந்த 15 ஆண்கள், ஒரு பெண் மற்றும் நான்கு குழந்தைகளை லாரியில் ஏற்றி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார்கள்.

''ஊர்வலம் தொடர்ந்து ஆவேசமாகப் புறப்பட்டது. 'இலங்கையில் வெடிக்க வேண்டிய வெடியை இங்கே வெடிப்பதா?' 'ஆதரவு கொடுத்த எங்களுக்கு அநீதி இழைப்பதா?'. 'அப்பாவித் தமிழர்கள் அங்கே வாடும்போது, இங்கே உங்களுக்கு கொண்டாட்டமா?' என்று கோஷங்களைப் போட்டுச் சென்றனர்.

ஊர்வலம் போலீஸ் ஸ்டேஷன் அருகில் சென்றது. ஊர்வலத்தினர் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பிக்கும் போது கீழத் தெருவில் தமிழீழ ராணுவத்தினர் தங்கியுள்ள வீட்டின் முன் கூட்டம் கூடத் தொடங்கியது. 'வாங்கடா வெளியே, நீங்கள்தானே ஜீப்பை விட்டு அடித்தீர்கள்?' என்று சத்தம் போட்டு பொதுமக்கள் கல் எறிய ஆரம்பித்தனர். தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் உடனே துப்பாக்கியை எடுத்து நான்கு ரவுண்ட் வானத்தை நோக்கிச் சுட்டிருக்கின்றனர்.

6ம் பக்கம் பார்க்க

தமிழீழ ஆவணக்காப்பகம்

## தமிழகத்தில் அராஜகச் செயல்கள்.....

பொதுமக்கள் பயந்து நாலாபுறமும் சிதறி ஓட ஆரம்பித்து விட்டார்கள். போலீஸாரும் துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் அந்த இடத்திற்கு விரைந்து வந்து பொதுமக்களை விரட்டி அடித்திருக்கின்றனர். எங்களைத்தானே விரட்டி அடிக்கிறீர்கள், அவர்களை ஒன்றும் செய்யவில்லையே என்று நினைத்தோ என்னவோ, பொதுமக்கள் போலீஸ் ஸ்டேஷனில் சரமாரியாக கற்களை விட்டு எறிந்திருக்கின்றனர். அதற்குப் பிறகு போலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

பொதுமக்களில் 48 பேர் கைது செய்யப்பட்டனர். தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். போலீஸார் சோதனை யிட்டு தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த மேலும் மூன்று பேரைக் கைது செய்தனர். அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி, தோட்டாக்கள், வெடிகுண்டுகள் எல்லாவற்றையும் கைப்பற்றினார்கள். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

"இலங்கையிலிருந்து வந்து இங்கே இருப்பவர்களில் பெரும்பாலோர் கள்ளக் கடத்தலில்தான் ஈடுபட்டுள்ளனர். ஒரு சம்பவமல்ல. இரு சம்பவமல்ல. கடற்கரையில் மூன்றரை லட்சம் பெறுமானமுள்ள பொருட்களை கஸ்டம்ஸ் அதிகாரி வந்து பிடிக்கும்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். ஒரு முறை கஸ்டம்ஸ் ஆபீஸர் முன்னிலையிலேயே இ.பி.ஆர்.எல்.எஃப் என்ற இயக்கத்தைச் சேர்ந்த சிலர் 'உங்களிடம் இருப்பதை வைத்து இரண்டு ரவுண்ட் அல்லது ஆறு ரவுண்ட் தான் சுடலாம். ஆனால், எங்களிடம் 52 ரவுண்ட் மிஷின் கன் இருக்கு. ஜாக்கிரதையாக இருங்கள். நகரக் கூடாது' என்று சொல்லி மிரட்டி இரண்டு கஸ்டம்ஸ் ஆபீஸர், எட்டு சிப்பாய்கள் அங்கே போயிருக்கும்போது, அவர்கள் கொண்டு வந்த கடத்தல் பொருட்களை இரண்டு லோடு கொண்டு வந்து இறக்கிவிட்டு, டாட்டா காண்பித்துச் சென்றனர். இதற்குப் பிறகுதான் கஸ்டம்ஸ் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு இந்த விஷயங்களைத் தெரியப்படுத்தினர்.

எஸ். ராமசாமி, ஓய்வுபெற்ற ஆசிரியர், குருகுலம் பேரண்ட்ஸ் அசோசியேஷன் மெம்பர், பொதுநல சேவகர்:

"வழக்கமாக கஸ்தூர்பாகாந்தி கன்யா குருகுல மாணவிகள் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த சிலர் ஜீப்பில் வந்து வரிசையாகச் சென்ற மாணவிகளின் மேல் வரிசையின் மத்தியில் உள்ள பெண்கள் மீது மோதி விட்டார்கள். 16 பெண்கள் காயமடைந்தனர். போலீஸார் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அடித்தவன் கொஞ்சமாவது தான் செய்தது தவறு என்று வருத்தப்பட வேண்டுமல்லவா? அது அவர்களிடம் இல்லை. போலீஸில் சொன்னோமென்றால் அயல்நாட்டிலிருந்து வந்தவர்களைப் பிடித்து வைக்கச் சட்டமில்லை என்று சொல்லி விட்டார்கள். ஆனால், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த மாணவிகளைப் பார்க்க சுமார் 500 மக்களுக்கு மேல் கூடிவிட்டார்கள். இந்த ஊரில் உள்ள முக்கிய பிரமுகர்களெல்லாம் வந்தார்கள். ஹரிகிருஷ்ணன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி.வி. ராஜேந்திரன் குருகுல டிரஸ்டி எல்லாம் வந்திருந்தார்கள். அப்போது எல்லோரும் என்ன செய்யலாம் என்று தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைக் கேட்டார்கள்., நான் சொன்னேன். 'இந்த ஊரில் உள்ள இலங்கைக்காரர்களெல்லாம் அகதி என்றால் அவர்களுக்கு ஜீப், மோட்டார் சைக்கிள், துப்பாக்கி, கார் எதற்கு? இவையெல்லாம் உள்ளவர்கள் அகதியா? அவர்கள் கடத்தல் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒன்றுமே செய்ய முடியாது, நாடு கடத்த முடியாது என்று சொன்னாலும், இவர்களிடம் உள்ள வாகனங்களைப் பிடுங்கி விடுங்கள். நடந்து போகட்டும். 'நடந்து வரட்டும்' என்று யோசனை சொன்னேன்.

தமிழீழ ராணுவத்தைச் சேர்ந்த சிவகுமார், ரவி, விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துக் கேட்டோம்.

"23.12.85 அன்று கன்யா குருகுல மாணவிகள் மீது ஜீப் மோதியபோது, கண்ணன் மற்றும் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு பேர் இருந்தார்கள். இந்த விபத்து எதிர்பாராதவிதமாக நடந்தது. ஜீப் வேகமாகப் போய்க் கொண்டிருந்த போது பிரேக் பிடிக்காமல் போய் விட்டது. வேண்டுமென்றே மோதியதாகச் சொல்வது உண்மையல்ல. நடந்த சம்பவத்துக்கு தாசில்தார், ஊர் மக்கள் முன்னிலையில் எங்கள் இயக்கத்தினர் மன்னிப்புக் கேட்டனர். பொதுமக்கள் எங்களுடைய கேம்புக்கு வந்து கல் வீசித் தாக்கினார்கள். நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கும் வந்து கல்வீசித் தாக்கினார்கள். பொதுமக்களில் சிலர் எங்களைத் தாக்குவதைத் தடுக்கவும் செய்தனர். ஆனால், பலர் சரமாரியாகத் தாக்க ஆரம்பித்து விட்டனர். அதனால் தப்பிக்க வேறு வழியில்லாமல் வானத்தை நோக்கிச் சுட்டார்கள். இல்லையென்றால் நாங்கள் உயிரோடு தப்பியிருக்க முடியாது. எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் இந்த நிகழ்ச்சி சம்பந்தமாகக் கைது செய்யவும் பட்டனர்" என்றார்கள்.

ஜி. சிங்கார வடிவேலு, மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர்:

"ஊர்வலம் பரகத் லாட்ஜைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது லாட்ஜில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்தவர்கள், சிறிய சிறிய கற்களை வேகமாக விட்டெறிந்து அடித்தார்கள். நானே நேரில் பார்த்தேன். அதன் பின்விளைவாகத் தான் கூட்டத்திலுள்ளவர்களும் திருப்பித் தாக்கும்படியான நிலை ஏற்பட்டது.

கே. நடராஜன், நகர ஜனதா கட்சித் தலைவர் கூறுகிறார்.

"அமைதியான முறையில்தான் ஊர்வலம் நடந்தது. பரகத் லாட்ஜிலிருந்து கல் விழுந்த பிறகுதான் அசம்பாவிதமே நடக்க ஆரம்பித்தது. ஆனால், ஒன்றுமறியாத அப்பாவி மக்களைப் போலீஸார் கைது செய்ததோடு லாக்கப்பில் இருக்கும் போது அடித்து உதைத்து கொடுமைப் படுத்தியிருக்கின்றனர்" என்றார்.

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுல மானேஜிங் டிரஸ்டி, ஆசிரியைகள் மற்றும் விபத்தில் காயமடைந்த மாணவிகளையும் சந்தித்துக் கேட்டோம். "இலங்கையிலிருந்து வந்து இங்கே தங்கியிருப்பவர்களின் கொட்டம் நாளுக்கு நாள் கட்டுக்கு மீறிச் சென்று விட்டது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு மாணவிகள் கோயிலுக்குப் போவதைக் கூட நிறுத்தி விட்டோம்" என்றார்கள்.

வேதாரண்யத்தில் உள்ள காவல் துறை அதிகாரி ஒருவரைச் சந்தித்துக் கேட்டோம். "நடந்துவிட்ட சம்பவம் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்" என்றார்.

நாங்கள் சந்தித்த பொதுமக்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அனைவருமே விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களை, குறிப்பாக தம்பாபிள்ளை பிரிவினரை வெறுக்கும்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

ஒரு ஜீப்பில் பத்துபேர் ஏறிக் கொள்வது, அதிவேகமாகச் செல்வது, துப்பாக்கி போன்ற ஆயுதங்களை பொதுமக்களுக்குத் தெரிவதுபோல் எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகள் பொதுமக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியிருப்பது நன்றாகத் தெரிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழக மக்களின் பங்கு என்ன என்பதனை விளக்கி வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திகளில் ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது

### இனி மொழியேன்! இனிய தமிழ்!

தமிழ் பேசும் எனதுயிர்
தமிழுக்காய் வாழவேண்டும்-இல்லை
அடிமைதான் நான் என்றால்
தமிழ் மறந்து வாழவேண்டும்.

மொழிகளா இங்கில்லை
நான் பேசி வாழ்வதற்கு
அரிய வை அமர்ந்த தமிழ்,
அடிமை எனக்கெதற்கு!

சுதந்திரம், தேடி நான்
கொடுக்க வேண்டும் எனதுயிர்க்கு-இல்லை
விடுதலை நாளளித்து
மறக்க வேண்டும்-தமிழ்மொழிக்கு

அடிமை எனக்கென்று
மொழியென்று ஒன்றெதற்கு
அடி வருடி வாழ்வதற்கு
வீரத்தமிழ் எனக்கெதற்கு!

என் நாட்டை-தனி நாடாய்
ஓர் நாடாய் நானமைத்து
தமிழ் ஈழம் அதில் சமைப்பேன்
அது வரையில்-நான் சொல்லேன்
தமிழன் தான் நான் என்று
அடிமை என் வாய் திறந்து
இனி மொழியேன்! இனிய தமிழ்!

புலிகேசி


விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்
SOLT

## இந்திய மக்களே!
## தமிழீழத்தை
## அங்கீகரியுங்கள்.

1. இலங்கை வாழ் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தேசிய உரிமையை நிலைநாட்டுகின்ற தமிழீழ தேசத்தை அங்கீகரியுங்கள்.

2. தமிழீழ விடுதலைக்காக களத்தில் போராடுகின்ற புரட்சிகர விடுதலை அமைப்புகளை தமிழர் விடுதலை இயக்கமாக அங்கீகரித்து நிபந்தனையற்ற ஆதரவு அளித்திடுவீர்.

தமிழக மக்களே!

தமிழக சட்டசபை, அனைத்து அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்கள், மாணவ சங்கங்கள் மற்றும் தனியார், பொது நிறுவனங்களில் மேற்படி இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## தமிழீழ போராட்டத்தை முன்னெடுப்போம்

சென்னை. 23 - 3 - 85

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
தமிழகம்.

கதிரவன் அச்சகம், சென்னை-41. Ph 416639


7ம் பக்கமும் பார்க்க

https://tamileelamarchive.com/



பத்திரிகையில் வெளியிட்ட செய்திகள்.....

## களத்தில் களம்-4

தமிழக மக்களின் தீர்க்கமான முடிவு உலகெங்கும் அடக்கு முறைக்குள்ளாகி வரும் தமிழினத்திற்கு ஓர் தனி நாடு அமைய வேண்டும் என்பதே.நாடுகடத்தப்பட்டோரை 'திருப்பி அழைத்தது தமிழக மக்களின் இனப் பற்றில் எழுந்த மன உணர்வே.ஒன்று மட்டும் நிச்சயமாகிவிட்டது தமிழகம் இருக்கும் வரை தமிழீழம் அமைந்தே தீரும். இந்த சுதந்திர பூமி மக்களின் சகல வகையிலானுை அடக்கு முறைகளையும் தகர்த்தெறிந்து மக்கள் தம்மைதாமே ஆளும் சுதந்திர தமிழீழமாக மலர வேண்டும்

அடக்கி ஒடுக்கப்பட்ட எமக்காக குரல் கொடுக்கும் உடன் பிறப்புகள் ஒரே ரத்தங்கள்.

''தானுட மறந்தாலும் தசை ஆடும்'' எம்மை நெஞ்சார அணைத்து பாதுகாத்து உதிரத்தையும் தசையையும் தந்து வார்த்து வரும் எம் தாய் தான். தமிழக மக்கள்.

ஒன்று நிச்சயமாகி விட்டது.

தமிழகப் இருக்கும் வரை தமிழீழம் அமைந்தே தீரும். தன் குழந்தையை உயிருக்கு மேலாக மதிக்கும் தாய் தன் குழந்தையை பெற்றே தீருவாள்.

10 ஒக்டோபர் 1985 வேட்டு 4

## தென்னகத் தமிழர் திரண்டெழுந்தால் இந்தியா தட்டிக்கழிப்பது அசாத்தியம்!

இந்திய அரசின் பலத்தைக் கண்டு நாம் பிரமிக்க வேண்டியதோ அன்றி அஞ்ச வேண்டியதோ இல்லை. தமிழக மக்களை இந்திய அரசு ஏமாற்றி எமக்கு ஓர் சமஷ்டி ஆட்சி முறையை ஏதோ ஒரு வகையில் தந்து தமிழக மக்களைத் திருப்திபடுத்த முடியாத நிலையில் எமது கோரிக்கையோடு தமிழக மக்களை நிற்கவைப்போமானால் அந்தத் தமிழக மக்களின் சக்திகளின் முன்பு இந்தியஅரசு பலவீனமானதாய் நிற்கும். எமது திசைக்கு இந்தியஅரசு பலவீனமானதாய் நிற்கும். எமது திசைக்கு இந்தியஅரசு திரும்பிவேண்டிவருமே தவிர இந்திய அரசின் திசைக்கு நாங்கள் திரும்பவேண்டி வராது.

உலக நாடுகளின் கவனத்திற்கும் எடுத்துச்.....

அவர்கள் தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் விடுதலைத் தீயைப் பரப்பியதோடு நிற்காமல் தமிழர்களது விடுதலைப் போராட்டத்தினை உலக அரங்கத்திற்கும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகள்' என்று கூறிவந்த மேற்கு நாடுகள் இன்று விடுதலைப் புலிகளையும், எமது தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களையும் பேட்டி கண்டு அதனை பிரித்தானியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் அளவிற்கு தமது போக்கினை மாற்றியுள்ளார்கள் என்றால் எமதுவிடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையே அது குறிக்கின்றது. இத்தகைய வளர்ச்சி பிரித்தானியாவுடன் நிற்கவில்லை பிரான்ஸ்(தலைவர் பிரபாகரன் அவர்களின் பேட்டி,விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சி போன்றன தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது),சுவீடன்(12ம் பக்கம் பார்க்க)போன்ற நாடுகளிலும் எமது விடுதலைப் போராட்டம் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.கீழே நாம் தருவது சில பத்திரிகைகளிலும்,புத்தகங்களிலும்(இவைகள் உலகநாடுகள் பலவற்றிலும் விநியோகிக்கப்படுகின்றவை என்பது குறிப்பிடத்தக்கது)விடுதலைப் புலிகள் பற்றியும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் வெளிவந்த கட்டுரைகளும் செய்திகளுமேயாகும்.

அடுத்த பக்கம் பார்க்க

# வேதாரண்யம் சம்பவம்: தமிழ் ஈழ விடுதலை புலிகள் விளக்கம்

## பொறுப்பற்ற செயலுக்கு கண்டனம்

சென்னை, டிச. 31-

வேதாரண்யத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சார்ந்த ஒரு குழுவினருக்கும்-பொதுமக்களுக்கும் மோதல் ஏற்பட்டதாக செய்தி இன்றைய நாளேடுகளில் வெளிவந்துள்ளது.

வேதாரண்யத்தில் முகாமிட்டுள்ள தமிழ்ஈழ விடுதலைக் குழு ஒன்று பொது மக்களை அச்சுறுத்தும்வகையில்நடந்து கொண்டதாக கூறப்படுகிறது.

இதை எதிர்த்து உள்ளூர் மக்கள் கண்டன ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளனர். ஊர்வலத்தினரை அச்சுறுத்துவதற்காக சில போராளிகள் வானத்தை நோக்கிசுட்டதாகவும், அதைத் தொடர்ந்து, சில போராளிகளைக் கைது செய்துள்ளதாகவும்செய்திகள் வந்துள்ளன.

இதைத் தொடர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில்,அதன் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சுப்ரமணியம் இன்று விடுத்துள்ள அறிக்கை விவரம்:

வேதாரண்யத்தில் மாணவிகள் மீது இலங்கைப் புலிகள் ஜீப்வண்டியை ஓட்டிச் சென்று மோதியதாகவும், அதையொட்டி வேதாரண்யத்தில் மாணவர்களுக்கும், களுக்கும் மோதல் ஏற்பட்டதாகவும்,புலிகள் மாணவர்களைப் பயமுறுத்த வானத்தை நோக்கிச் சுட்டதாகவும் பல்வேறுவிதமான செய்திகள்-இன்றையகாலைப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இதுபற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விளக்கம் அளிக்க விரும்புகின்றது.

முதலாவதாகவேதாரண்ணியத்தில் நடைபெற்ற மேற்படி சம்பவத்திற்கும், எமது இயக்கத்திற்கும் எத்தவித சம்பந்தமுமில்லை. எமதுஇயக்கம் இது போன்ற பொறுப்பற்ற விசமத்தனமான நடவடிக்கைகளில் இதுவரைஈடுபட்டதுஇல்லை; ஈடுபடவும் மாட்டாது.

### பொறுப்பற்ற செயல்

ஏற்கெனவேசென்னைமீனம் பாக்கம் விமான நிலைய குண்டு வெடிப்பு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ''தமிழீழ இராணுவம்'' என்ற குழுவை சேர்ந்தவர்கள்தான் இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில்,இதுபோன்றபொறுப்பற்ற வகையில் செயற்படுபவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### குழப்பாதீர்

இச் செய்திபற்றி ஒரு ஆங்கிலப்பத்திரிகை இலங்கைப் புலிகள் சம்பந்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் என்பதுதிரு.வே.பிரபாகரன் தலைமையில் இயங்கும்இயக்கம் ஆகும். வேறு எந்த இயக்கத்திற்கும்-புலிகள் என்றபெயருக்கும்எவ்விதசம்பந்தமுமில்லை. பழமைவாய்ந்ததும்,பலம்மிக்கதுமான எமதுஇயக்கம்,கடந்த பதிமூன்று வருட காலமாக தொடர்ச்சியாக தீவிரபோராட்டத்தை நடத்தி வருவதால்-நீண்ட காலமாக தமிழக பத்திரிகைகளில் விடுதலைப் புலிகள் என்று பிரபல்யமாகி இருக்கிறது.தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், தற்போது இயங்கும் ஏனைய தமிழீழ விடுதலை அமைப்புகளுக்கும் வேறுபாடு தெரியாத காரணத்தினலோ அன்றி புலிகள் என்ற பெயர் பிரபல்யமான காரணத்தினாலோஎந்த இயக்க செய்திகளிலும் தமிழக பத்திரிகைகள் ''புலிகள்'' என்றுகுறிப்பிட்டுவருகின்றன.

இதனால் எமது இயக்கத்தின் தனித்துவம் பாதிக்கப்படுவதுடன் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி ஏனைய அமைப்புகளின் சில நடவடிக்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் பழிசுமக்க வேண்டி இருக்கின்றது. எனவே தமிழீழ விடுதலை அமைப்புகள் பற்றி செய்திகளை பிரசுரிக்கும் போது அவ்வியக்கங்களின் பெயரைப்பயன்படுத்துமாறும்-விடுதலைப் புலிகள் என்ற பெயரை பொதுவான பெயராக பயன்படுத்துவதை தவிர்க்குமாறும்,தமிழகபத்திரிகையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் திரு. சுப்ரமணியம் கூறியுள்ளார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



Workers Press

Saturday January 26, 1986. Telex: London 916427 Newsdesk 01-720 6784

# TAMIL EELAM: WHY A SEPARATE STATE?



*A young Tamil guerilla fighter in the struggle for a separate socialist state of Tamil Eelam*



*Liberation Tiger guerilla fighters . . . sustained by the people*

FEATURE ARTICLE

Workers Press
Satureday
18/01/1986

THE Liberation Tigers of Tamil Eelam are a revolutionary group fighting for self-determination for the Tamil nation in Sri Lanka against the oppression of the ruling Sinhala regime.

The Tamil and Sinhala peoples are two distinct social formations with distinct cultures, languages and history. They had existed as separate national entities in pre-colonial times until they were arbitrarily unified under one state structure by British imperialism in the early nineteenth century.

It was the national oppression of the racist Sinhala ruling elite beginning soon after 'independence' in 1949 which drove the Tamil people on the road to self-determination.

Based on the revolutionary Tamil youth, the Tamil Tigers were formed by Velupillai Prabakaran in 1972 and later emerged as the armed resistance movement of the Tamil masses.

Their commitment to armed struggle was not undertaken lightly, but only after a careful appraisal of the objective conditions of the national struggle. Part of their theoretical analysis, written by Professor A. S. Balasingham in 1983, is reproduced below.

**TAMIL guerrillas fighting the Sri Lankan government have ended their cease-fire agreement. They blame continued killings and atrocities by government troops, and say they will take 'defensive action' to protect their people from these attacks**

A spokesman for the Liberation Tigers of Tamil Eelam, V. Thilakar, said the ceasefire agreement had ceased to exist as far as his organisation was concerned, after violations by Sri Lankan security forces.

Steps would be taken to protect the lives and property of the island's Tamils.

BY OUR FOREIGN STAFF

Workers Press
Monday
27/01/1986

## TAMIL TIGERS' LEADER SPEAKS

# PREPARED FOR LONG STRUGGLE

**Velupillai Prabakaran is the 31year old leader of the Tamil Liberation Tigers. The following interview was given to the Student Organisation of Liberation Tigers and is reprinted with their permission.**

## Sri Lankan Army in clashes with LTTE

SIXTEEN Sri Lankan Army personnel were killed in encounters with units of the Liberation Tigers of Tamil Eelam, (LTTE), at two different places in Mannar district.


According to an LTTE statement, nine soldiers were killed at Parapukadanthan and seven at Aalkattiveli village.

The clashes began when LTTE commandos attacked the soldiers in armoured cars and jeeps coming to destroy the LTTE camps in the area.

The militants used land mines and rockets which damaged three army jeeps.

JANE'S DEFENCE WEEKLY

VOLUME 5 NUMBER 4 1 FEBRUARY 1986



**World defence news**

□**SRI LANKA:** Seven army personnel died and nine were seriously injured on 11 January in an army attack against a Liberation Tigers of Tamil camp at Udayarkadu, Mallaithivu district.

**SRI LANKA'S INSURGENCY REVIEW:** 1079 people, including security personnel, were killed by insurgents during 1985, Sri Lanka's Ministry of National Security has disclosed. It adds that more than 2000 'terrorist acts' were reported since the cessation of hostilities came into effect on 18 June 1985.

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# மக்களோடு புலிகள்

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலையடைந்ததிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த இனவாத சிங்கள அரசியல் பல ஒடுக்கு முறைகளுக்கும், தாங்கொணாத் துன்பங்களுக்கும் ஆளாகிவந்த தமிழீழ மக்களின் உள்ளத்துணர்ச்சியின் வெளிப்பாடாக வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென சீறிப் பாய்ந்தது தன்னம்பிக்கையுள்ள வீரப் புலியொன்று. அந்த விடுதலைப் புலி ஆயுதபலமோ அல்லது விடுதலைப்போராட்டத்திற்கு வெளிநாடுகளால் கிடைக்கின்ற உதவிகளோ இல்லாது, நிராயுதபாணியாக எதுவித ஆதரவும் அற்ற அனாதைகளாக நின்று அல்லலுறும் தமிழினத்தைப் பார்த்து 'தலைவிதி' என்று தனக்குத்தானே சமாதானம் கூறி கைகட்டி கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கவில்லை, மாறாக தமிழனது விடிவை நோக்கிச் சிந்தித்தது. அந்த வீரவேங்கை அத்துடன் நில்லாது தமிழீழ மக்கள் மீதும் அவர்களது செயற்பாட்டின் மீதும் முழு நம்பிக்கை கொண்டு போராட்டக் களத்தில் குதித்தது. அந்த வீரவேங்கையினது சிந்தனையின் வெளிப்பாடாகவும் செயற்பாட்டின் பிரதிபலிப்பாகவும் பிரவாகம் எடுத்ததுதான் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம். எமது தலைவர் வே. பிரபாகரனினால் சில முற்போக்கான இளைஞர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொரில்லாப்போராட்ட முறையை தமது பாதையாக வகுத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்றது.

சமூக பொருளாதார அரசியற் தத்துவங்கள் நாட்டுக்கு நாடு இனத்திற்கு இனம் வேறுபடுகின்றன. பிரச்சனைகளும், பிரச்சனைகளை நோக்கிய தீர்வுகளும், தீர்வுகளை நோக்கிய தத்துவங்களும், நடவடிக்கைகளும் இடம், காலம், எல்லைக்கை என்றவரையறைகளோடு வேறுபட்டு நிற்கின்றன. இதனை நன்கு விளங்கிக் கொண்ட விடுதலைப் புலிகள் தமிழினத்தின் விடுதலைப் புரட்சியையும், சுதந்திர எழுச்சியையும் போராட்டப் பாதையினையும் தமிழீழத்தின் சொந்தச் சூழலையும், சொந்த அமைப்பினையும் கருவாக வைத்தே செயற்படுத்தி வருகின்றார்கள். வாடகைக்கு வாங்கிய சுலோகங்களை ஊக்குசக்தியாக வைத்துக்கொண்டு தமிழீழ அரசியலை நடாத்தாமல், தன்னைத்தானே ஆளக்கூடிய தகைமையையும், பல்வேறு தரப்பட்ட முற்போக்குச் சிந்தனையையும், செயற்பாட்டினையும் கொண்ட சகல தமிழ் மக்களையும் இணைத்தே தமிழீழத்தை வென்றெடுக்க, எமது தாய் மண்ணில் உண்மையான விடுதலையை நிலைநாட்ட போராட்டக்களத்தில் நின்று போராடி வருகின்றார்கள்.

அன்று ஒரு துப்பாக்கியின் உதவியுடன் விடுதலைப் புலிகள் ஆரம்பித்து வைத்த, தமிழ் மக்கள் அனைவரதும் தலைவிதியையே நிர்ணயிக்கும் விடுதலைப் போராட்டம், இன்று சிங்கள இனவாத இராணுவம் எங்கெங்கு சென்றாலும் அங்கங்கு சென்று தங்களது எதிர்த்தாக்குதலை நடாத்தும் அளவிற்கு விரிவடைந்துள்ளது என்றால் அதற்குக் காரணம் விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ மக்களது பங்களிப்பும், விடுதலைப் புலிகளின் தியாக உணர்வும் மனோதிடமும் என்றால் அது மிகையாகாது. சரியான வழிநடத்தலின் பின்னே முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் விடுதலைப்பாதையில் முன்னேறிவரும் விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தினை மட்டும் தமிழீழத்தில் நடாத்திவரவில்லை.

உணவு உற்பத்திக் குழு, கலாச்சாரப் படை, தமிழீழ ஆய்வு நிறுவனம் போன்ற பல அமைப்புக்களை உருவாக்கி பல திசைகளிலும் தங்களது செயற்பாடுகளை விரிவடையச் செய்து தமிழின விடுதலையை நோக்கி வீறுநடை போடுகின்றனர் விடுதலைப் புலிகள்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளை அமைப்புக்களாக உருவாக்கப்பட்ட இவ் நிறுவனங்கள் மூலம் தமிழீழ மக்களுக்கு விடுதலையுணர்வைக் கொடுக்கக் கூடிய கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தியும், போராட்டக்காலத்தில் எதிரியினால் ஏற்படுத்தப்படும் உணவுத்தடைகளை நீக்கும் பொருட்டு நெருக்கடிகால உணவு உற்பத்தி, பாதுகாப்பு திட்டங்களை அமுல்படுத்தியும், போராட்டக் காலத்திலும் அதற்கடுத்த நிர்மாணக்காலகட்டத்திலும் எழக்கூடிய பொருளாதார நெருக்கடிகளை வென்று திட்டமிட்ட அடிப்படையில் எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆய்வு செய்து அமுல் படுத்தியும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் மேலும் முனைப்படையும்போது ஏற்படக்கூடிய நெருக்கடிகளை கருத்தில் கொண்டு போராட்டத்தைப் பாதுகாப்பதற்காக பல நடவடிக்கைகளையும் முன்வைத்து தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டும் தமிழினத்தின் விடிவிற்காகப் போராடிவருகின்றார்கள். இந்த செயற்பாடுகளின் வெளிப்பாடுகள்தான் விடுதலைப் புலிகளின் உணவு உற்பத்திக் குழு வெளியிட்டுள்ள 'உணவுப் பாதுகாப்பும் நெருக்கடிகால உணவும்' என்ற புத்தகமும் 'முருங்கைச் சாகுபடி' என்ற புத்தகமும் விடுதலைப் புலிகளின் தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள 'நமது பொருளாதாரம்' என்ற புத்தகங்களும் ஆகும். விடுதலைப் புலிகளின் இம்முயற்சிகளுக்கு பல ஆராய்ச்சி நிபுணர்களும் உதவிபுரிய முன்வந்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் உணவு உற்பத்திக் குழுவினால் வெளிவிடப்பட்ட 'முருங்கைச்சாகுபடி' என்ற புத்தகத்தின் முன்னுரை.

*இந்நூலைப் பயன்படுத்தி, முருங்கையைப் பயிரிட்டு, பலனும் பணமும் ஒருங்கே பெற்று, உழவர்குலம் சிறக்க வேண்டும் என்ற உந்துதலில், மேழிபிடிக்கும் கரங்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேம்.*

டாக்டர் அ. ஜான் நைட்

கோயமுத்தூர்- 641003 — விரிவாக்க கல்வி நெறியாளர்

19- 5- 84 — தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

இப் புத்தகத்தின் அணிந்துரை.

*காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு நடத்தப்பட்டிருக்கும் இந்தப் பாடம் பயன் மிக்கதும், வரவேற்கத்தக்கதுமாகும். கொல்லைப்புறத்திலே நட்டால்கூட, கொள்ளை விளைச்சல் தரும் முருங்கையை பரந்த அளவில் தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்யக்கூடிய உத்திகளை இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது. இது உழவர்களுக்கு உரிய நேரத்தில் தரப்பட்டிருக்கும் ஊன்றுகோலாகும்.*

*தொடரட்டும் இதுபோன்ற நன்முயற்சிகள்!*

வை. இராசகோபாலன்

கோயமுத்தூர்- 3 — துணைவேந்தர்

மே 19- 1985 — தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

விடுதலைப் புலிகளின் தமிழீழ ஆய்வு நிறுவனம் (ROOT) தமிழீழ விடுதலையில் புதியதோர் பரிமாணத்தை முன்னெடுக்கும் விதமாக செயல்பட்டுவருகின்றது. தமிழீழத்தில் இன்றைய நெருக்கடி காலத்தில் எழும் பல்வேறு பிரச்சனைகளில் குறிப்பானதான பொருளாதார நெருக்கடியினை ஆய்வு செய்து அதற்கான தீர்வுகளைக் காண்பதிலும் அமுல்படுத்துவதிலும் செயல்பட்டு வருகின்றது. இந் நிறுவனம் தனது வேலைத்திட்டத்தை விரிவுபடுத்தி மேலும் செயலூக்குமுள்ளதாக ஆக்குவதில் உங்களது பங்களிப்பினையும் நாடுகின்றது.

இந் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 'நமது பொருளாதாரம்' என்ற புத்தகத்தில்,

1. நெருக்கடியான காலகட்டத்தில் தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் தனது மிகக் குறைந்த தேவைகளையாவது பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்.
2. மக்களின் நுகர்வு மட்டத்தை உயர்த்துவதன் மூலம் சகல பிரஜைகளினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
3. உற்பத்திக்கான பொருளாதாரக் காரணிகளை முழுமையாகப் பயன்படுத்துதல்.
4. கிடைக்கக்கூடிய வளங்களை திறமையாக ஒழுங்குபடுத்துவதோடு மிகத் திறமையாகப் பயன்படுத்தல்.
5. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, போன்ற அடிப்படை சேவைகள் சகலர்க்கும் கிடைப்பதற்கு வழியேற்படுத்தல்.
6. விஞ்ஞான தொழில் நுட்பப் பயன்பாட்டுடன் விவசாயம், கைத்தொழில், சேவைத்துறை என்பனவற்றை விருத்தி செய்தல்.

11ம் பக்கம் பார்க்க

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



LIBERATION TIGERS OF TAMIL EELAM

# போர் முனையில் விடுதலைப் புலிகள்

SOLT (U.K.)

**2-1-86 :-** : முள்ளியவளையில் கால்நடையாக வந்த இராணுவத்தினர் மீது கண்ணிவெடி தாக்குதல் மேற் கொண்டபோது 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

: வவுனியாவில் கால்நடையாக வந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டபோது இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

: எமது உறுப்பினர் ஒருவரை தேடி இராணுவம் வந்தபோது ஏற்பட்ட மோதலில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

**3-1-86 :-** : மட்டக்களப்பில் கைக்குண்டு வீசித் தாக்குதல் மேற்கொண்டபோது 4 பொலிசார் படுகாய மடைந்தனர்.

: மட்டக்களப்பில் நிகழ்ந்த மற்றுமொரு சம்பவத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**5-1-86 :-** : முல்லைத்தீவில் கண்ணிவெடித் தாக்குதலின்போது 6 அதிரடிப் பொலிசார் கொல்லப்பட்டனர்.

: யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நிலையடுத்த இராணுவத்தினர் மீது R. P. G. கொண்டு தாக்கியதில் 9 இராணுவத்தினர் பலியானார்கள்.

: யாழ் சுங்கப்பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்த்தாக்குதலின் போது ஒரு லெப்டினன்ட் உட்பட 3 இராணுவத்தினர் மரணம்.

: யாழ் மணிக்கூட்டு வீதியில் இடம் பெற்ற நேரடி மோதலில் இராணுவத்தினர் பலர் இறந்துள்ளனர் தொகை தெரியவில்லை.

: L. M. G. கொண்டு தாக்கியதில் குண்டு வீசும் ஹெலிகப்டர் ஒன்றும் யாழ் நகரில் சுட்டு விழுத்தப்பட்டது

**10-1-86:-** : முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார்கட்டு எனுமிடத்திலுள்ள எமது முகாமை இராணுவத் தினர் சுற்றிவளைக்க முற்பட்டபோது நடாத்திய தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர், 9 பேர் படுகாயமடைந்தனர்.

**15-1-86:-** : குப்புளான், வசாவிளான், புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் தனித்தனியே இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் பல இராணுவம் இறந்தது எனினும் சரியான தொகை தெரியவில்லை.

**16-1-86 :-** : கோட்டையிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மீது கைக்குண்டு வீசியதில் 3 பேர் படுகாய மடைந்தனர்.

**17-1-86:-** : மூதூரிலுள்ள தெகிவத்தையில் நிலக்கண்ணி வெடி, வெடித்ததினால் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 4 பேர் படுகாயமடைந்தனர்,

: பன்குளத்தில் இராணுவத்தினருடன் நடைபெற்ற நேரடி சண்டையில் 3 இராணுவனர் கொலலப்பட்டனர்.

: தொண்டமன்னாறில் நடைபெற்ற நேரடி யுத்தத்தில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டர்.

: மன்னார் மாவட்டத்திலுள்ள நாயாற்று வெளியில் எமது தாக்குதலின் போது இரு ஜீப்வண்டிகள் முற்றாக சேதமடைந்தன. இதனையடுத்து ஏற்பட்ட நேரடிச்சமரில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**18-1-86 :-** : மட்டக்களப்பில் கைக்குண்டு வீசித் தாக்கியபோது 3 பொலிசார் கொல்லப்பட்டனர்.

: தெகிவத்தையில் ட்ரக்டர்க்கு பின்னால் நடந்து வந்த இராணுவத்தினர் மீது கண்ணிவெடி வெடிக்கச் செய்ததில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

**19-1-86:-** : மட்டக்களப்பில் நடைபெற்ற தாக்குதலின்போது 5 அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்.

: மட்டக்களப்பிலுள்ள திருக்கோயிலில் கண்ணிவெடி தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

**22-1-86 :-** திருகோணமலையிலுள்ள கும்புறுப்பிட்டியில் பொதுமக்களைத் தாக்கமுயன்ற இராணுவத்தினர்மீது தாக்குதல் நடத்தியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனினும் தொகை தெரிய வில்லை.

**23-1-86:-** : தெல்லிப்பளையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 8 இராணுவம் கொல்லப் பட்டதுடன் 8 பேர் படுகாயமடைந்தனர். 2 ஹெலிகப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. குண்டு வீசும் விமானமொன்றும் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

**24-1-86:-** : அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோயிலில் ஏற்பட்ட மோதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர். ஜீப்பொன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

: நாவற்குழியில் நடைபெற்ற சண்டையில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் சரியான தொகை கிடைக்கவில்லை.

**26-1-86:-** : ஒட்டிசுட்டானில் நடந்த நேரடி மோதலில் 2 பொலிஸ் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

**27-1-86:-** : மூதூரில் 5 சிங்கள ஊர்க்காவல் படையினர் கொல்லப்பட்டனர்.

: திருகோணமலை கட்டைப்பறிச்சானில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 10 பேர்வரை காயமடைந்தனர்.

11ம் பக்கம் பார்க்க

**இரத்தம் + வியர்வை + கண்ணீர் = தமிழீழ நாட்டின் விடுதலை.**

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



போர் முனையில்.....

**29-1-86:-** : மன்னார் மாவட்டத்திலுள்ள பரப்புகடந்தானில் 25 வாகனங்களில் வந்த இராணுவத்தினர் எமது முகாமைச் சுற்றி வளைக்க முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் 2 லெப்ட்டினன்ட்கள், 3 சார்ஜன்கள் உட்பட 29 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 8 பேர் படுகாயமடைந்தனர்.

: திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூரில் பொதுமக்களைத் தாக்கிய இராணுவத்தினர் மீது அதிரடித் தாக்குதல் மேற்கொண்டபோது 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு ஹெலிகப்டரும் சேதமாக்கப்பட்டது.

ஒரு சிறந்த இராணுவ நடவடிக்கையே
சிறந்த அரசியல் பிரச்சாரமாகும்

—ரெஜிடெப்ரே

வேங்கை.....

அவ்வாறுல
போலிக்கும்பல்களை தமிழ் மண்ணில் இருந்து எப்படி நம் சகோதரர்கள் விரட்டி அடிக்கின்றனரோ அதே போன்று நாமும் வெளிநாடுகளில் இவர்களை இனம் கண்டு ஒதுக்கியெறியவேண்டும்.

நண்பா! இறுதியாக ஒரு விடயம், ஒரே ஒருதாக்குதலின் மூலம் தமிழ் ஈழம் பெறுவோம் என்றும், தொடர்ந்து சில வருடங்களாக வரும் பொங்கல்களையும், தீபாவளிகளையும் நாட்டிற்கும் இயக்கத்தின் வட்டன் சிலையாளது அண்மையிலே ஒன்று கூடி ஓர் தீர்மானம் எடுத்துள்ளனர். அதாவது இளைஞர் கூட்டமும், ஆயுதங்களும் மற்றைய இயக்கங்களை விட தம்மிடம் அதிகமாய் இருப்பதாயும், தாம் களத்திலே குதிக்க தயாரான போதும் ஆயுதங்களுக்கு பாவிக்க வெடிமருந்துகள் இல்லாமல் இருப்பதாயும் அதற்கு வெளிநாடுகளில் நிதி சேகரிக்க வேண்டும் என தீர்மானம் எடுத்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றனராம்.

நண்பா! எவர்தான் எப்படி ஏமாற்றினும், மாற்றினும் தமிழீழ மக்கள் தம் இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்று விட்டனர். இன்னமும் சிந்திக்கத் தவறியோர் நன்குகச் சிந்திக்கட்டும். சிந்தனையின் இறுதி முடிவாக, தீர்க்கமான முடிவாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ளட்டும். அன்று முன் வைத்த காலை என்றும் புலிகள் பின் வைக்கப் போவதில்லை. தமிழீழ பகுதி எங்கும் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கும். தமிழீழம் என்கின்ற ஒரு மலர் நிச்சயமாக புலிகளிடமுல் மலரத்தான் போகிறது. இறுதியாக ஒன்றை மட்டும் கூறுகின்றேன். நேரத்தில் இல்லை ஒரு செய்தி என்பதனை கூறி இம்மடலை முடித்து அடுத்த மடலில் தொடர்கின்றேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அன்புடன்
செபமாலையார்.

மக்களோடு.....

போன்ற முக்கிய குறிக்கோள்களை முன் வைத்து அக் குறிக்கோள்களை அடைவதற்கு பயன்படுத்தவேண்டிய உள்ளீடுகளைப் பெறுவதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து அக் குறிக்கோள்களை அடைவதற்கு விருத்தி செய்ய வேண்டிய துறைகளான விவசாயம், மிருகவளர்ப்பு, கைத்தொழில், சக்தி (சூரியசக்தி, காற்றுசக்தி, உயிரினவாயு), தொழில் நுட்பம் என்பனவற்றைப் பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார்கள். (மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் ஒரு நெருக்கடிகாலத்தை முக்கியமாகக் கருதி அமைக்கப்பட்ட ஒரு மாதிரித்திட்டம் என்ற அடிப்படையில் அதன் எல்லைகள் மிகக் குறுகியதாகவே உள்ளன.)

தமிழீழப் பிரதேசம் சார்ந்த சுயசார்புப் பொருளாதாரத் திட்டத்தின் பல அம்சங்களை மேலும் மேலும் சேர்த்துக்கொள்வதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு எமது பங்கினைச் செலுத்த முன்வருவோம்.

எனவே எமது மண்ணின் விடிவிற்கு நாம் ஒவ்வொருவரும் [ஆம்! வீணே தேவையற்ற விதமாக கழியும் ஒவ்வோர் நிமிடத்தையும்! மணியையும்! நாட்களையும்!!!......] முழு மூச்சுடன் செயற்படுதல் வேண்டும்.

தமிழீழ விடுதலையில் ஆயுதம் ஏந்திப் போராடுதல் ஓர் அங்கமே தவிர ஆயுதம் ஏந்திப் போராடுதல் தான் தமிழீழ பங்களிப்பு என்பதல்ல. தமிழீழ விடுதலைக்காக இது போன்ற பல்வேறு துறைகளில் உணர்வு பூர்வமாக பங்களித்து புரட்சியைக் காத்தல் தமிழீழ மகன் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

நன்றி

வெல்க தமிழீழம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!!

<u>விடுதலைப் புலிகளுக்கு எதிர்நிற்க முடியாத சிங்களப்படை ஓட்டம்</u>

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள யாழ்ப்பாணம் கோட்டை, நாவற்குழி, பருத்தித்துறை, தொண்டைமானாறு, காங்கேசன்துறை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து அண்மையில் ஆயுதபாணிகளாக பல தடவைகளில் வெளியே வந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் நடத்திய நேரடித் தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாமல் முகாம்களுக்குத் திரும்பி ஓடினர். கடந்த சில வாரங்களாக சிங்கள இராணுவத்தினர் பாதுகாப்பான நவீன ஆயுதங்கள், கவசவண்டிகள் சகிதம் கெலிக்கொப்டர், குண்டுவீச்சு விமானங்கள் பாதுகாப்புக்கு வர வெளியே வருவதும் பின் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு எதிர்நிற்க முடியாமல் ஓடுவதும் தமிழீழத்தின் வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

<u>அரண்டவன் கண்களுக்கு தெரிவதெல்லாம் புலி</u>

அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தெரியும். அது போல இன்று புலிகளைக் கண்டு கிலி பிடித்த சிங்கள ஆட்சியாளருக்கும், அவர்களின் ஆயுதப் படையினருக்கும் தமிழீழத்தில் காண்பவர்கள் எல்லாம் புலிகளாகவும் காணுமிடம் எல்லாம் புலிகளின் குகைகளாகவும் (முகாம்கள்) தெரிகிறது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது கிலி பிடித்த ஆயுதப்படையினர் தமிழீழத்தில் ஏராளமான பொதுமக்களைக் கொன்றுவிட்டு புலிகளைக் கொன்றுவிட்டோம் என்று அறிக்கை விடுகின்றார்கள். விவசாயிகளின் வயல்களில் உள்ள காவல் கொட்டில்களை அழித்துவிட்டு புலிகளின் முகாம்களை அழித்துவிட்டதாக பெருமை பேசுகின்றனர்

**THERE IS NO SUBSTITUTE TO TAMIL EELAM**

Liberation Tigers Of TAMIL EELAM

**PLEASE HELP US TO ACHIEVE IT**

தமிழீழ ஆவணக்காப்பகம்

# தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு சுதுமலை மக்கள் விடுவிக்கும்

# பணிவான அறிவிப்பு

**ஈழ விடுதலைக்காக உயிரையே அர்ப்பணிக்கும் அருமைச் சகோதரர்களே!**

எங்கள் ஊரில் அனேக மாதங்களாக இருந்து எங்கள் ஊர் மக்களுக்கும் விடுதலை உணர்வை தோற்றுவித்தீர்கள். எங்கள் ஊர் மக்களுக்கு எத்தனையோ இன்னல்களிலிருந்தும் ஆறுதல் அளித்தீர்கள். அல்லும் பகலும் உங்கள் தியாக உணர்வைக் கண்ணுற்றேம். வியந்து பாராட்டினேம்.

23-12-1985 இல் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், உங்களுக்கும் நடந்த நேரடி மோதலைக் கண்டு உங்கள் வீரத்தை பாராட்டினேம். வீரத் தாய் பெற்ற மக்கள் என்பதை உளமார உணர்ந்தோம். தொடர்ந்தும் உங்கள் போராட்ட வளர்ச்சி எங்கள் கிராமத்திலும் வளரவேண்டும் என்று உறுதி கொண்டோம்.

30-12-1985 இல் திடீரென எங்கள் ஊரில் உள்ள முகாம்களை மூடி விட்டு வேறு இடத்தில் முகாம் அமைத்துக்கொண்டீர்கள்.

உங்கள் பிரிவு மிகவும் வாட்டுகின்றது. தாங்க முடியவில்லை. தயவு செய்து உங்கள் முடிவை மறு பரிசீலனை செய்யவும். விரைவில் உங்கள் முடிவை மாற்றி அமைக்கவும். தொடர்ந்தும் உங்கள் போராட்ட வளர்ச்சி எங்கள் ஊரில் அமையட்டும். எங்கள் வீடுகளையே இருப்பிடமாகத் தந்து உதவுகின்றேம். சகல ஒத்துழைப்பும் தருகின்றேம். சகல பாதுகாப்பும் தருகின்றேம்.

தயவுசெய்து உங்கள் முடிவை மாற்றி அமைக்கவும்.
விடுதலைப் புலிகளின் தியாக வரலாற்றில் தமிழ்த்தாய் காவியம் எழுதுகிருள்.

**வாழ்க விடுதலைப் புலிகள்**
**வாழ்க தமிழ் ஈழம்.**

இங்ஙனம்
சுதுமலை வாழ் மக்கள்

## பற்றி எரியும் விடுதலைத் தீயினிலே

இமயத்தில் கொடியுயர்த்தி இலங்கைவரை படையெடுத்து,
சரித்திரங்கள் படைத்துவைத்த பண்டைத் தமிழனவன்,
மானத்தை காத்திடவே அவதரித்த எங்கள் பிரபாகரன்,
தோற்றுவித்த கட்டுப்பாடான புலிகள் இயக்கத்திலே
தியாக சிந்தையுடன் வீறுகொண்டெழுந்து
வீட்டிற்கு ஒவ்வொருவர் அணிவகுக்க வந்துவிட்டார்,

வருங்கால சந்ததிக்கு ஒளி ஏற்றும் நோக்குடனே
மக்களின் எதிர்கால நல்வாழ்வே இலட்சியமாய்
தீர்க்க சிந்தையுடன், தெளிந்த நல்லறிவுடனே
களத்தில் நிலைகொண்டு, எதிரியை பலி எடுத்து
சிலி கொள்ளச் செய்யும் எங்கள் விடுதலைப்புலிகளிலே
தமிழர் எல்லோரும் நம்பிக்கை கொண்டுள்ளார்.

தமிழர் பிணத்தின்மேல் எக்காளம் இடும் அந்த
இருண்ட அரக்கர்களின் கொட்டம் அடக்கிடவே,
அங்கொன்று, இங்கொன்றாய் தாக்கத் தொடங்கி, இன்று
எதிரி எங்கெங்கு போனாலும் தாக்கி விரட்டி
மக்கள் நெஞ்சினில் நம்பிக்கை ஒளியேற்றி
வீரப்புலிகள் எல்லாம் அணிவகுத்து நிற்கின்றார்.

எங்கள் இளம் தலைவன் திறமைதனை மதிக்காமல்
இயக்கம் என்று சொல்லி பொறாமை கொண்டு சில
கொடிய நெஞ்சம் கொண்ட கோடரிக்காம்புகள்
இன்றும் எம்மிடையே குழப்பங்கள் புரிகின்றார்
சத்தியமாய், பற்றி எரியும் இவ்விடுதலைத் தீயினிலே
சுட்டுப் பொசுங்கும் இக் கோடரிக் காம்புகள்தான்.

-----ஜோதி-------

(நோர்வே)



## சுவீடன் சஞ்சிகை அட்டையில் தலைவர் பிரபாகரன் படம்! →

சுவீடனிலிருந்து சுவீடிஷ் மொழியில் வெளிவரும் Sydasien என்ற சஞ்சிகை, அதன் 1985 டிசெம்பர் மாத இதழில், ஐந்து பக்கங்களை ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஒதுக்கியுள்ளது. இக்கட்டுரையில் ஜெயவர்த்தன தமிழர்களை இனக்கொலை புரிந்து வருவதும், அதை எதிர்த்துத் தமிழீழ சுதந்திரம் கோரி, தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்தி வரும் போராட்டம் பற்றியும் விரிவாக எழுதப் பட்டுள்ளது. கட்டுரையின் மத்தியில் மறைந்த லெப்டினண்ட் செல்லக்கிளியின் படமும் இடம் பெற்றுள்ளது. முன்புற அட்டையில் துப்பாக்கி ஏந்தியபடி நிற்கும் தமிழீழக் காவலர் தளபதி பிரபாகரனின் கம்பீரமான படம் வெளியிடப்பட்டு அதன் கீழ், Ledaren Och Legender Inom Tamilgerillan, V. Pirabhakaran என்று எழுதப்பட்டுள்ளது.




**விடுதலைப்போர் ஓயாது! விடுதலை வேட்கை சாயாது!**

https://tamileelamarchive.com/



முதலாவது ஆண்டு நினைவு தினம்

வீர மரணம் 09 - 01 - 1985

காப்டன் ரவீந்திரன் (பண்டிதர்)

# தமிழீழ மாதாவின் தன்னிகரற்ற தவப் புதல்வன்

## தியாகத்தின் திருவுருவம்

புலியிருந்த குகையிங்கு தவிக்க விட்டு
புகழுடம்பு பெற்றெங்கோ சென்று விட்டீர்
தன்னலமற்ற பெருந் தியாகி யுன்னைத்
தரணி யுள்ளவரை நினைவு கூர்வோம்
தமிழனது உயிர் உடைமை அழியும்போது
தாங்காத உளம் படைத்த தன்மை கொண்டீர்
உன்னுடலைத் தமிழன்னை யணைத்து விட்டாள்
உனைத் தொடரும் உள்ளங்கள் எண்ணில் இல்லை
உன்பணி தொடருகின்ற உறுதி செய்தோம்
ஊன்தின்னும் கழுகுகழுக் கஞ்சி வாழோம்
உன்வாழ்வு எமக்கெல்லாம் வழிகாட்டட்டும்
நாம் வாழ மொழி வாழ நாடு வாழ
நம்முடனே பண்டிதனும் நிழல்போல் நிற்பான்.

**கம்பர்மலை நண்பர்கள்**

துள்ளித் திரிந்துவரும் பள்ளிப் பருவமதில்
அள்ளி அணைத்தெடுக்கும் அன்னையினை விடவதிகம்
தெள்ளு தமிழ்மேல் நீள்பற்றுப் பண்டிதனே
சொல்லி விட்டாற் செயற்படுவான் எதற்கும்.

மானப் புலிப்படையின் மரியாதைச் சின்னமவன்
தேனை விடயினிமை தெரிந்தவரோ டாற்றுமுறை
ஆதி தொடங்கியின்று ஆர்த்துஎழும் வேங்கைகளை
வீதி வரவழைத்தான் துணிந்து.

தேடினான் தேடிப்போரை ஆடினான் ஆடிவெற்றி
சூடினான் வீரவேங்கை விண்ணடைந் தோராமாண்டில்
நாடினான் விட்டகொள்கை வழியடி தவருநின்று
காணுவோம் ஈழம் வாரிர் பண்டிதன் சாந்திக்காக.

**பொதுமக்கள்**
**அச்சுவேலி**

நமது மக்களின் ஆணையை
**நமது தலைவன்** சிரமேற்கொண்டான்!
நமது தலைவனின் ஆணையை
நீ சிரமேற்கொண்டாய்!
நமது தலைவனின் நம்பிக்கை நிதியம் நீ!
நமது இனத்தின் விடிவுகால நட்சத்திரம் நீ

**தியாகங்கள்**

உன் அமைப்புக்குப் புதியவைகள் அல்ல!
அதுவே அதன் வரலாறு - அதை
நாடறியும்; நாமறிவோம்!
உன் மரணம் மக்களை வாட்டியது - ஆனல்
மக்கள் சோர்வடையவில்லை
உன்போன்ற பலரது வாழ்வின் முடிவில்தான்
தமிழ் ஈழத்தின் விடிவு என்பதால்
அதோ
மேலும், மேலும்,
மேலும், மேலும்,
ஆயிரம், ஆயிரமாய்,
உனது தாபனத்தின் கீழ் மக்கள் அணிதிரள்
கின்றனர்!
இது நீண்ட பயணம்!
ஆயினும் நாம் சோர்வடையப் போவதில்லை.
உனது பாதையில்
நாமும் தொடர்கிறோம்!

**கொற்றாவத்தை மக்கள்**

*மறப்புலிநீ மடியவில்லை தோழர் எங்கள்*
*வல்லுயிர்கள் அத்தனைக்கும் ஜீவன் ஆனாய்*
*புறப்படடா போர்ப்பரணி பாட என்று*
*பொழுதெல்லாம் ஊக்குகிறாய் நாம் நீ யானோம்*
*உறக்கமினித் தாயகத்தின் விடிவு கண்டே*
*ஓய்வதினித் தமிழராட்சிக் கொடியின் கீழே*
*அறப்பணியோம் விடுதலைக்கே உன்றன் ஆவி*
*அர்ப்பணித்தாய் நிச்சயமாய் வெல்வாய் நீயே*

**-நண்பர்கள்-**

ஆரம்பத்தில் இவன் தனது இலட்சியப் பயணத்திற்காக குடும்பத்தைவிட்டுப் பிரிந்ததும் இவனது தாயும் குடும்பத்தினரும் மட்டுமே அப்பிரிவால் வாடினர். ஆனல் இன்று அவன் இவ்வுலகை விட்டுப் பிரிந்ததும் ஒரு தாய் அல்ல, ஆயிரமாயிரம் தாய்மார்கள், ஏன் தமிழீழ மக்கள் அனைவருமே துயரத்தால் வாடினர்.

இந்த மாவீரனின் மரணத்திற்கு நாம் கண்ணீர்ப் பூக்களால் மட்டும் அஞ்சலி செலுத்தவில்லை. அவன் எமது தாய் மண்ணின் விடிவை விரும்பினன். அந்த உரிய இலட்சியத்திற்காக தனது உயிரையும் அர்ப்பணித்தான். இந்த ஒப்பற்ற உன்னதமான பணிக்கு நாம் எம்மை முழுமையாக அர்பணித்துச் செயல்படுவதே அந்த வீரனின் தியாகத்திற்கும், ஈடுசெய்யமுடியாத இழப்பிற்கும் நாம் செலுத்தக்கூடிய வீர அஞ்சலியாகும்

"இனி ஒரு விதி செய்வோம்"

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

09-01-1986

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



**'We the Liberation Tigers wish to express our support for and solidarity with all revolutionary liberation struggles of the oppressed masses of the world'**

தமிழீழ விடுதலைப் புலிகள்

***Liberation Tigers of Tamil Eelam***

## Greetings from the Liberation Tigers of Tamil Eelam to the Palestinian People

Dear Comrades,

At this crucial and critical moment in the history of the Palestinian struggle for self-determination, we, the Liberation Tigers of Tamil Eelam, on behalf of the people of Tamil Eelam, wish to extend our solidarity, support and friendship to the determined and heroic struggle of the people of Palestine.

The subversive hands of Zionism and Imperialism are stretched all over the world. We, the peoples of Tamil Eelam and Palestine face the common enemy and have a common cause. A determined revolutionary war is being waged in several fronts of the world against the Zionists, Imperialists and Racists. The National Liberation struggles of the peoples of Tamil Eelam and Palestine are an integral part of this International War against the evil forces of Zionism, Imperialism and Racism.

We assure you, Comrades that we will fight against these Zionists and Imperialists all over the world until this barbarism is completely eliminated from the face of the earth.

Greater co-operation and co-ordination between the people of Tamil Eelam and the people of Palestine will be an effective force to eradicate the menace of Zionism, Imperialism and Racism. We should take constructive steps to forge unity and solidarity in our joint struggle against these global forces of reaction and subversion.

We the LTTE & the people of Tamil Eelam express our unequivocal solidarity and friendship to the people of Palestine in their gravest and bravest struggle against Zionism and Imperialism.

**Long live the Solidarity and friendship between the peoples of Palastine and Tamil Eelam.**

Political Committee,
**Liberation Tigers of Tamil Eelam.**

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையினது சகல விதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புகளோ விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ SOLT இற்கு அனுப்பும்போது காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பி வைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ADDRESS :- SOLT,
BM Box 3694,
London WC1 N3XX.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்**

தொலைபேசி இல.

**01-475 0543**

# ஐ.நா. சபையில் ராமகிருஷ்ணன் அவசர முறையீடு

**பண்ருட்டி ராமச்சந்திரன், மிர்தாவுக்கு பின்னல்...**

கடந்த 2 ஆண்டுகளில் இரு தடவை இலங்கை தமிழர் பிரச்சினை, ஐ.நா. சபை கூட்டத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

1983-ம் ஆண்டு, அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி ஐ.நா. சபையில் உரிமைக்குரல் கொடுத்தார்.

அதன்பின்னர் கடந்த ஆண்டு, அப்போதைய வெளியுறவு இணை அமைச்சர் ஆர்.என். மிர்தா குரல் கொடுத்தார் என்பது நினைவிருக்கலாம்.

மனித உரிமைகள் மறுக்கப்படுவது, அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுவது ஆகியவை காரணமாகவே தமிழர்கள் கூட்டம் கூட்டமாக இலங்கைத் தீவை விட்டு வெளியேறி வருகிறார்கள். இது வேதனைக்குரியது' என்றும் ராமகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.



தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/



# A NATION IS BLEEDING! IT NEEDS ALL HELP TODAY! NOT TOMORROW!

**பத்திரிகைச் செய்திகள்**

—ஹிந்து —தினகரன் —பதுரைமணி —தினமணி (தினமலர்) —தினமணி —தினமணி

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தென்னவன்மரவாடி, திரியாய், குச்சவெளி உள்ளடங்கிய 16 கிராமங்களிலிருந்து சுமார் 40 ஆயிரத்திற்குமதிகமான தமிழர்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றார்கள். இத்தமிழர்களை இக்கிராமங்களிலிருந்து வெளியேற்றி இவர்களை வேறிடத்திற்கு செல்லுமாறு வறபுறுத்தி இலங்கையரசு நிர்ப்பந்தித்து வருகின்றது. தமிழர்களின் இருப்பிடங்களில் சிங்களவர்களை குடியேற்றும் அரசின் திட்டத்திற்கு இராணுவம் உதவியாக உள்ளது. மேலும் மூதூர் பகுதியில் உள்ள 25 ஆயிரம் அகதிகளிற்கான அரசின் நிவாரண உதவிகள் ஏதும் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றார்கள். மேற்குறிப்பிட்ட வண்ணம் கடிதமொன்றை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு இலங்கையிலிருந்து அகதிகள் மறுவாழ்வுக் கழகம் அனுப்பியுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவதை தடுக்கவும், தமிழ் அகதிகளிற்கு நிவாரணம் கொடுக்கவும், ஆயுதப்படைகளின் தாக்குதல் நிறுத்தப்படவும், இந்திய அரசு உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டும் 575 பேரிற்கு மதிகமானோர் காயமடைந்ததையுமடுத்து கண்காணிப்பு குழுவிலிருந்து இரு தமிழ் உறுப்பினர்களான சிவத்தம்பியும், சிவபாலனும் விலகினார்கள். கண்காணிப்புக் குழு இராணுவ கட்டுப்பாட்டிற்குள் இருப்பதும், சுதந்திரமாக செயற்படாமையும், தமிழ் மக்கள் காணாமல் போவது, கொல்லப்படுவது போன்றவற்றையும் அடுத்தே இவர்கள் இம்முடிவிற்கு வந்தனர் என கருதப்படுகின்றது.

**மூதூரில் 18 அப்பாவித்தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இந்தத் தாக்குதலில் 140 வீடுகள்தீக்கரையாகக்ப்பட்டது. கிளிநொச்சியில் 40 தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.**

18-1-86 அன்று இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சில விசைப்படகுகள் மீன் பிடிக்கச் சென்றபோது இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் வைத்திருந்த மீன்களையும், வலைகளையும் கொள்ளையடித்ததோடு விசைப்படகுகளையும் சேதமாக்கியுள்ளனர். இந்திய மீனவர்களின் இழப்பு அன்றுமட்டும் 30,000 இந்திய ரூபாய்கள் ஆகும். மேலும் மீனவர்களை அவமானப்படுத்தியதோடு தமது போர்க்கப்பலின் கழிப்பறைகளையும் கழுவுவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக இலங்கை அரசிடம் விசாரணை நடத்துமாறு இந்திய அரசை மீனவர் சங்கம் கேட்டுள்ளது. மேலும் இப்பிரச்சினை தொடர்பாக போப்பாண்டவருடன் கதைப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலத்திற்கு சென்று இலங்கைத் தமிழர்களிற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து, தேவையான நிதி சேகரிக்கும் முயற்சியில் சுப்பிரமணிய சுவாமி ஈடுபட்டுள்ளார். இதற்கிடையில் இராமேஸ்வரக்கடலில் இந்தியா மீனவர்களிற்கு தொல்லை கொடுக்கும் இலங்கை கடற்படையினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமுகமாக, மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரை ரோந்து புரிய "ஔவையார்" எனும் புதிய ரோந்துக் கப்பல் ஒன்று இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

ஜனவரி மாதம் 28-ம் திகதி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்திப்பதாகவும் இச்சந்தர்ப்பத்தின் போது இலங்கை சென்று திரும்பிய பயணத்தின் வீடியோ கசட்டுகளை அத்தலைவர்களிற்கு காட்டி அவர்களிடம் இலங்கை நிலவரத்தை விளக்கி இலங்கைத் தமிழருக்கு ஆதரவு திரட்டுவேன் என்று நெடுமாறன் கூறினார். இவ்வாறே பம்பாய், கல்கத்தா, திருவனந்தபுரம், ஹைதராபாத், பெங்களூர் போன்ற இடங்களில் அங்குள்ள தலைவர்களைச் சந்தித்து இலங்கை தமிழர்களிற்கு ஆதரவு திரட்டுவேன் என மேலும் கூறினார். ஆயுதம் வேண்டுவதற்கு தேவையான பணத்தை விடுதலைப்புலிகளிற்கு பெற்றுக் கொடுக்குமுகமாக தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாக சென்று நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகளை நானும், எனது கட்சியும் ஈடுபடுவோம் எனக் கூறிய நெடுமாறன் அதற்குரிய செயலிலும் ஈடுபட்டுள்ளார்.

எம்மைச் சுற்றிவர சண்டை சச்சரவுகள் இருந்தபோதிலும் இலங்கையிலே யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில், இடைக்கிடை பகிஸ்கரிப்புகள் ஏற்பட்டபோதிலும் அமைதி நிலவுகின்றது என புதுடெல்லியில் நடைபெற்ற யுனெஸ்கோ மகாநாட்டில் பேசும்போது பேராசிரியர் வித்தியானந்தன் கூறினார். இப்பல்கலைக் கழகத்தில் பயிலும் 2,600 மாணவர்களும் போராளிகளிற்கு ஆதரவாளர்களாகவேயுள்ளார்கள். பொலிசாரையும் ஆயுதப் படைகளையும் எதிர்ப்பதற்கு "பொடியள்" நன்கு ஆயத்தமாக உள்ளார்கள். என மேலும் கூறினார். கொழும்பில் இருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்காக எதுவித நிதியும் ஒதுக்கிடு செய்வதில்லையென கூறிய வித்தியானந்தன், மட்டக்களப்பு பல்கலைக் கழகம் இராணுவத்தினரால் தேடுதல் வேட்டைக்கும் அழிவிற்க்கும் உட்பட்டுள்ளது என மேலும் கூறினார்.

தமிழ் அகதிகள் முகாமில் சிங்கள ராணுவம் அட்டூழியம்:

**பள்ளி முதல்வர் உள்பட 8 பேர் சுட்டுக்கொலை!**

வெலிக்கடை சிறையில் கொடுமை இல்லையாம்:

**கண்காணிப்புக் குழு புளுகு: தமிழ் கைதிகள் மறுப்பு**

உடலில் நெருப்பினால் சூடு போட்டு

கத்தியால் குத்தி சித்ரவதை

தமிழ் இளைஞர்களை

**மின்சாரத்தை பாய்ச்சி பொசுக்கிக் கொன்றனர்**

சிங்கள ராணுவத்தினர் வெறியாட்டம்

ராணுவம் கண்மூடித்தனமாக

**தமிழர்களை கொல்வதா?**

**ஹெலிகாப்டரில் இருந்து சுட்டதில் 2 தமிழர் பலி!!**

**தமிழர் கிராமத்தில் ஹெலிகாப்டர் குண்டு வீச்சு!**



**ராஜீவ் கடிதம்! ஜெயவர்த்தனவுக்கு!!**

"தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படவேண்டும்"

நன்னிரவில், ராணுவ முகாமில்

**விடுதலைப்புலிகள் என்று நினைத்து மாடுகளை சுட்டு சாய்த்தனர்!**

தமிழீழ ஆவணக்காப்பகம்

https://tamileelamarchive.com/

# தேசிய பாதுகாப்பு நிதி

## தமிழீழ விடுதலைப் புலிகள்

# புலிகளின் கலை மாலை

VENUE : PORCHESTER CENTRE – HALL
(Porchester Rd. Entrance)
Queens Way ,
Paddington , London W2 .

NEAREST
TUBE : Bayswater ; Royal Oak ;
Queens Way ; Paddington .

DATE : SUNDAY. 13th. April. 1986.

TIME : 5 PM

## படைப்புக்கள்

### 1. விடுதலையுணர்வைத் தூண்டும் புரட்சிகரநாடகம்


வழங்குபவர்கள்,
விடுதலைப் புலிகளின் கலாச்சாரப் படை. பிரித்தானியக் கிளை.

### 2. புலிகளின் புயலிசை

விடுதலைப் புலிகளின் கலாச்சாரப் படை. மேற்கு ஜேர்மன் கிளையினரின்

'புலிகளின் புயலிசைப் புகழ்'
தமிழீழத்தின் மெல்லிசை மன்னர்கள் பரமேஸ் கோணேஸ்,
திரைப்படப் பின்னணிப் பாடகர் கே. எஸ். பாலச்சந்திரன்,
தமிழீழத்தின் தலைசிறந்த கலைஞர்களில் ஒருவரான முகில்வாணன்,
மற்றும் பல இளைய, புதிய கலைஞர்களும் மேற்கு ஜேர்மனிய
இசைக் கலைஞர்களும் ஒருங்கிணைந்து வழங்குகின்றார்கள்.







ஒரு நாள் கண்டிப்பாக புரட்சி வெடிக்கும்!!
"விடியலுக்கு இல்லை தூரம்"
தமிழீழப் போராட்டம் தொடர்கிறது - - - - -
வரமுடியாதோர் பயணத்தை மறிக்க வேண்டாம்.
ஓய்வெடுக்கட்டும் - ஒதுங்கட்டும்.
நடக்க முடியாதவர்கள் - இருக்கட்டும் - இடைஞ்சலாக வேண்டாம்
பகற்கனவு காண்பவர்கள் விடிவு தானாக வரும் எனக் காத்திருப்போர் - காத்திருக்கட்டும்.
தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குவது போல் நடிப்பவர்களை!

தமிழீழப் பயணங்கள்முடிவதில்லை தொடர்கிறது.
ஒரு துளி கடல் நீர் இருக்கும் வரை அலைகள் ஓயப்போவதில்லை.
அதோ தூரத்தே தெரிகிறது ஓர் விடிவெள்ளி.
யாரும் வரலாம்! விழித்தவர்கள் எவரும் வரலாம்!!
நாம் பயணத்தை தொடர்வோம். உறுதியாக தொடர்வோம்.
உதிரிகள் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!!
ஒன்றாக நடப்போம். ஒற்றுமையாக நடப்போம்.
இனி ஒருவிதி செய்வோம்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**அன்பளிப்பு**

£10 £20

**அமைப்பாளர்கள்**

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

SOLT (U.K.)
258 GREEN STREET
LONDON E7 8LF UNITED KINGDOM
TEL: 01-475 0356

குறிப்பு
----
ஏப்ரல் மாதம் 19ம், 20ம் திகதிகளில் MANCHESTER, BIRMINGAM பகுதிகளில்
'புலிகளின் புயலிசை' சுழன்று வீசக் காத்திருக்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்